பக்கங்கள்: 12

விலை: 20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikathir

விழயல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 17 வெள்ளிக்கிழமை 31.05.2019 கதிர் 207

**இது ரகசியம் அல்ல!**

ஓரிரு தமிழ் இணையத் தளங்களில் மட்டும் இந்தத் தகவல் வெளி வந்திருந்தது. அதனால் இப்பத்தியில் அது பற்றிய தகவலைப் பரிமாறிக் கொள்வது நல்லது என்று நினைத்தேன்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முன்னர் பக்கம் 02

# 2009 இல் தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோது பால்சோறு வழங்கி மகிழ்ந்தனர் முஸ்லிம்கள்!



## ஆனாலும் இஸ்லாமிய மக்கள் பாதிக்கப்படாத வகையில் கூட்டமைப்பு நடந்துகொள்ளும் என்கிறார் சிறிதரன் எம்.பி.

கிளிநொச்சி, மே 31

மஹிந்த ராஜபக்ஷ அரசினால் தமிழ் மக்கள் மீது 2009 இல் இன அழிப்பு மேற்கொள்ளப்பட்டுத் தமிழ் மக்கள் சாகடிப்பட்டபோது எந்தவொரு முஸ்லிம் தலைவர்களும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. மாறாக முஸ்லிம் தலைவர்களும், சில மக்களும் பள்ளிவாசல்களிலும், தென் பகுதிகளில் சில பிரதேசங்களிலும் பாற்சோறு வழங்கி சிங்கள மக்களுக்கும் இராணுவத்தை உற்சாகம் கொடுக்கும் வகையில் செயற்பட்டிருந்தார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார். பக்கம் 11

## கொழும்புத்துறை வீடொன்றில் 7 கைக்குண்டுகள் நேற்று மீட்பு!



யாழ்ப்பாணம், மே 31

கொழும்புதுறைப் பகுதியிலுள்ள வீடொன்றின் மலசலகூடக் குழியில் இருந்து 7 கைக்குண்டு பக்கம் 11

## கார் மரத்துடன் மோதுண்டு ஓமந்தையில் ஒருவர் சாவு!

**மூன்று பேர் படுகாயம்**



வவுனியா, மே 31

வவுனியா ஓமந்தை பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.10 மணியளவில் கார் ஒன்று மரத்துடன் மோதுண்டு பக்கம் 11

## இந்தியப் பிரதமராக 2 ஆவது தடவை நேற்று பதவியேற்றார் நரேந்திர மோடி



புதுடில்லி, மே 31

ஜனாதிபதி மாளிகையில் நேற்று இரவு நடைபெற்ற விழாவில் நரேந்திர மோடி 2ஆவது முறையாக இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். பக்கம் 11

## புதுடில்லி சென்றடைந்த மைத்திரிக்கு வரவேற்பு!



புதுடில்லி, மே 31

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இரண்டாவது தடவை பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியாவுக்கு பக்கம் 11

## தாக்குதல் குறித்து முன்னெச்சரிக்கை விடுத்தது தேசியப் புலனாய்வுத்துறை!


TOP SECRET

INFORMATION ON AN ALLEGED PLAN OF ATTACK

TOP SECRET

www.thamilan.lk

**வெளியானது பரபரப்புக் கடிதம்**

கொழும்பு, மே 31

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாசீம் மற்றும் அவரது சகாக்கள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தும் வாய்ப்பு இருக்கின்றது எனக் கூறி கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி தேசிய புலனாய்வுத்துறையின் தலைவர் சிசிர மெண்டிஸ், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு அறிவித்திருக்கும் கடிதம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பக்கம் 11

## வெளி வீதியுலா வருவதை தவிர்த்தார் நல்லைக் கந்தன்

யாழ்ப்பாணம், மே 31

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் நேற்று நடைபெற்ற கற்பூரத் திருவிழாவில் சுவாமி வெளிவீதி பக்கம் 11

## தேசிய பாதுகாப்புச் சபையை 2 மாதம் கூடாதது பெரும் தவறு!



**மஹிந்த ராஜபக்ஷ சீற்றம்**

கொழும்பு, மே 31

தேசிய பாதுகாப்புச் சபை இரண்டு மாதங்கள் வரையில் கூடவில்லை என்பது பெரும் தவறாகும். அதற்குப் பொறுப்பான தலைவரும் இதுகுறித்து வெகு பக்கம் 11

## இலங்கை வருகின்றார் அமெ. உதவிச் செயலர்!



கொழும்பு, மே 31

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ஆர். கிளார்க் கூப்பர் இலங்கைக்கு விஜயமொன்றை பக்கம் 11

## 21 ஆம் திகதி தாக்குதலை அறிந்திருக்கவேயில்லை!

**மீண்டும் அதிரடியாகக் கூறினார் மைத்திரி**

கொழும்பு, மே 31

கடந்த மாதம் 21 ஆம் திகதி நடந்த தற்கொலைத் தாக்குதல்கள் குறித்து தாம் அறிந்திருக்கவில்லை என்று மீண்டும் கூறியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால பக்கம் 11

## வடக்கு அரசின் தீர்மானங்கள் குறித்து ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும்

**அவைத் தலைவர் சிவஞானம் கோரிக்கை**

யாழ்ப்பாணம், மே 31

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை ஆளுநர் சுரேன் இராகவன் மேற்கொள்ள வேண்டுமென வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதிலும் குறிப்பாக வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பாடசாலைகள் வேறு மாகாணத்தில் பக்கம் 11

# வெற்றிக் கணக்கை நேற்று ஆரம்பித்தது இங்கிலாந்து

உலகக் கிண்ணத் தொடரின் ஆரம்பப் போட்டியில் தென்னாபிரிக்க அணியை 104 ஓட்டங்களால் வீழ்த்தி இங்கிலாந்து அணி தனது சொந்த மண்ணில் வெற்றிக் கணக்கை ஆரம்பித்தது.

12 ஆவது ஐ.சி.சி. உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நேற்று (இலங்கை நேரப்படி மாலை 3 மணிக்கு) ஆரம்பமானது. ஆரம்பப் போட்டியில் இயன் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணியும் டூப்பிளஸ்ஸி தலைமையிலான தென்னாபிரிக்க அணியும் மோதின.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பை தீர்மானிக்க, இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

இங்கிலாந்து தொடக்க ஆட்டக்காரர்கள் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள் என்பதால் முதல் ஓவரிலேயே சுழற்பந்துவீச்சாளர் இம்ரான் தாஹிர் அறிமுகப்படுத்தப்பட்டார். அதற்கு பலனாக ஆட்டத்தின் இரண்டாவது பந்திலேயே பேர்ஸ்டோவ் ஆட்டமிழந்தார். அதன்பிறகு, ஜேஸன் ராய் மற்றும் ஜோ ரூட் ஜோடி அமைத்து ஓட்டங்கள் சேர்த்தனர். இருவரும் அடுத்தடுத்து அரைச் சதம் அடித்தனர்.

இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்கு 106 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், ஜேஸன் ராய் 54 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து அடுத்த ஓவரிலேயே ஜோ ரூட்டும் 51 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுகள் விழுந்ததால் இங்கிலாந்து அணி மீண்டும் நெருக்கடிக்குள்ளானது.

இதையடுத்து, அணித்தலைவர் மோர்கன் மற்றும் ஸ்டோக்ஸ் மீண்டும் இணைப்பைக்கட்டமைத்தனர். இந்த இருவரும் அரை சதம் அடித்தனர். எனினும் மோர்கனும் அரைசதம் அடித்தகையோடு 57 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இந்த ஜோடியும் 4-வது விக்கெட்டுக்கு 106 ஓட்டங்கள் சேர்த்தது. தொடர்ந்து களமிறங்கிய பட்லர் 18, மொயீன் அலி 3, வோக்ஸ் 13 என ஏமாற்றம் அளித்தனர்.

ஸ்டோக்ஸ் மட்டும் தனிநபராக கடைசி வரை போராடி வந்தார். இதனால், இங்கிலாந்து அணி 300 ஓட்டங்களைக் கடந்தது. இந்த நிலையில், சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஸ்டோக்ஸ் 49-வது ஓவரின் கடைசி பந்தில் 89 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இதன்மூலம், நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகளை இழந்து 311 ஓட்டங்கள் குவித்தது.

தென்னாபிரிக்கா சார்பில் நிகிடி 3 விக்கெட்டுகளையும், ரபாடா மற்றும் தாஹிர் தலா 2 விக்கெட்டுகளையும், பெலுக்வாயோ 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

312 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 39.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 207 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 104 ஓட்டத்தினால் தோல்வியைத் தழுவியது.

தென்னாபிரிக்க அணிசார்பில் டீகொக் 68 ஓட்டங்களையும், வேன்டர்தாசன் 50 ஓட்டத்தையும், பெலக்வெயோ 24 ஓட்டத்தையும் அதிகபடியாக பெற்றதுடன் ஏனைய வீரர்கள் அனைவரும் சொப்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து அணிசார்பில் ஜோப்ரா ஆர்ச்சர் 3 விக்கெட்டுக்களையும், பிளங்கட், பென்ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், அடில் ரத், மொய்ன் அலி தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 12 ஆவது உலகக் கிண்ணத்தின் முதல் வெற்றியை பெற்ற அணியாக பதிவாகியுள்ளது. (ஐ)




# புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நாளாந்தம் 20 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் விநியோகம்!

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத் தில் குடிதண்ணீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய மத்திய நிலையத்தினால் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சிகாரணமாக புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஆயிரத்தி 967 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 18 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இதில் பாதிப்பைக் எதிர்கொண்டுள்ளனர்.

இந்த மக்களில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ள மக்களுக்கு தண்ணீர் பௌசர்கள் மூலம் நாள்தோறும் 20 ஆயிரம் லீற்றம் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

# முத்துஐயன்கட்டில் விபத்தில் ஏழு பேர் காயம்

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர்

மாலை நேரக் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களை ஏற்றிச்சென்ற ஓட்டோ ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதி இந்த விபத்து இடம் பெற்றது.

முத்துஐயன்கட்டு புனிதபூமிக்கு திரும்புகின்ற சந்திப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த 7 பேரும் ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்து இடம்பெற்ற இடத்திற்குச் சென்ற




ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ)

# மோதகத்துக்குள் அட்டை சுகாதாரப் பிரிவில் முறையீடு

சித்தங்கேணியில் உள்ள உணவகத்தில் வாங்கிய மோதகம் ஒன்றினுள் அட்டை இருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து இது தொடர்பாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பண்ணாகத்தில் உள்ள முன்பள்ளி ஒன்றில் கல்வி கற்கும் மாணவனுக்குப் பெற்றோர், சித்தங்கேணிச் சந்தியில், சித்தங்கேணி – சங்கானை பிரதான வீதியில் உள்ள உணவகத்தில் மோதகம் வாங்கிக் கொடுத்தனர்.

மாணவன் அதை முன்பள்ளியில் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது உள்ளே அட்டை இருந்துள்ளது. அதை எடுத்து வெளியே எறிந்த மாணவன் இது தொடர்பாக ஆசிரியையிடம் கூறியுள்ளான். ஆசிரியை, மதியம் மாணவனை அழைத்துச் செல்ல வந்த பெற்றோரிடம் விடயத்தைத் தெரியப்படுத்தினார்.

நேரே அந்த உணவகத்திற்குச் சென்ற பெற்றோர் இது தொடர்பாகக் கேட்டனர். தாங்கள் உணவகத்தில் மோதகம் அவிப்பதில்லை எனவும் வேறு நபர்களிடம் எடுத்தே விற்பனை செய்வதாகவும் உணவக உரிமையாளர் கூறினார்.

இதுபோன்று சில சம்பவங்கள் தொடர்பாக முன்னரும் சிலர் தங்கள் கவனத்திற்கு கொண்டுவந்



தனர் எனவும், இனிமேல் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

எனினும், இந்த விடயம் தொடர்பாக அப்பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை மேற்கொள்வதாக அவர் கூறினார்.

உணவகங்களில் முறையான சுகாதார விதிமுறைகளைப் பேணுமாறு சுகாதாரப் பிரிவினர் அடிக்கடி கூறுகின்ற போதிலும் சில உணவக உரிமையாளர்கள் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுப்பதில்லை எனவும் சுகாதாரம் பேணப்படாத உணவுகள், பழுதடைந்த உணவுகள் கூட விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் அடிக்கடி குற்றஞ்சாட்டி வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த போராளிகளை இணைந்து 'ஜனநாயகப் போராளிகள் கட்சி' உருவாக்கப்பட்டமை தெரிந்த சங்கதிதான்.

ஆரம்பத்தில் இந்த அமைப்பை 'தீண்டத் தகாத' சக்திகளாகக் கணித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் – குறிப்பாக இலங்கை தமிழரசுக் கட்சியினர் – இப்போது தங்களின் 'வீட்டு'க் கொல்லையில் சின்ன குடிசை வீடு அமைத்துத் தங்க இடம் கொடுத்த மாதிரி ஜனநாயகப் போராளிகள் கட்சியினருக்குப் பட்டும் படாமலும் இடமளித்து வருகின்றனர். இவ்வருட ஆரம்பத்தில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட அங்கொன்றும், இங்கொன்றுமாக ஓரிரு ஆசனங்களில் கூட்டமைப்புப் பட்டியலில் போட்டியிட அவர்களுக்கு இடம்கொடுத்தனர்.

கூட்டமைப்பில் அக்கட்சியினருக்கு இடமுண்டு. ஆனால் இப்போது கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள மூன்று பிரதான கட்சிகளான இலங்கைத் தமிழரசு, ரெலோ, புளொட் போன்ற பிரதான பங்கு வகிபாகம் அக்கட்சிக்குக் கிடையாது என்ற கணக்கில்தான், 'ஒப்புக்குச் சப்பாணி' போல கூட்டுக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

அதாவது 'வீட்டு'க் கொல்லைக்குள் இடம். ஆனால் வீட்டுக்குள் இடமில்லை என்ற மாதிரி.

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலும் அதன் துணைச் செயலாளர்களுள் ஒருவரும் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் மட்டுமே ஜனநாயகப் போராளிகள் கட்சியினருடன் அடிக்கடி சந்திப்புக்களை நடத்தி, ஏதேனும் உதவிகளை வழங்கி, கொண்டு – கொடுத்து பரிவோடு பழகி வருகின்றார்.

அக்கட்சியின் பிரதிநிதிகள் ஆறுபேர் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு சென்றிருந்தனர்.

கட்சித் தலைவர் வேந்தன், செயலாளர் கதிர், பேச்சாளர் துளசி, உறுப்பினர்களான சுரேஷ்குமார் (பருத்தித்துறையில் உள்ளூராட்சி உறுப்பினர்) பிரபா, யோகேஸ்வரன் (வவுனியா) ஆகியோரே அந்த அறுவரும்.

இவர்கள் நாடாளுமன்றத்துக்கும் சென்றனர். அங்கு அவர்களைக் கூட்டிச்சென்றவர் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான்.

அனைவரையும் அங்கு அன்போடு வரவேற்று விருந்தளித்த தொண்டமான், அவர்களுக்கு ஒரு முக்கிய சந்திப்பையும் ஏற்பாடு செய்து கொடுத்தார். யாருடன் தெரியுமா?

முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவுடன்தான் அந்தச் சந்திப்பு. முப்பது நிமிடங்களுக்கு மேல் பேச்சு நடந்திருக்கின்றது. அதிகம் மஹிந்தர்தான் பேசினாராம். ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் செவிமடுத்தனர். அவர்களுள் ஒருவரான யோகேஸ்வரன்தான் சிங்கள – தமிழ் மொழி பெயர்ப்புச் செய்தார்.

அந்தச் சந்திப்புடன் விடயம் முடியவில்லை. அதற்குப் பின்னர் பஸில் ராஜபக்ஷவையும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்புகளில் விடயங்கள் இருக்கின்றன. அவற்றில் முன்னேற்றம் இருப்பதாகத் தெரிந்தால் அது பற்றி இந்தப் பத்தியில் உசாவுவோம்.

இன்னொரு கொசுறுத் தகவல். கொழும்புப் பயணத்தை முடித்துக் கொண்டு வடக்கே திரும்பிய ஜனநாயகப் போராளிகளின் பிரதிநிதிகள் அதன் பின்னர் கூட்டமைப்பின் முக்கியஸ்தரான சி.வீ.கே.சிவஞானத்தைச் சந்தித்தனர். நாடாளுமன்றத்துக்குச் சென்றமை, தொண்டமானைச் சந்தித்தமை பற்றியெல்லாம் அவருக்கு எடுத்துரைத்த அவர்கள், மஹிந்த ராஜபக்ஷவுடனும், பஸில் ராஜபக்ஷவுடனும் இன்ன பிறருடனும் நடத்திய சந்திப்புகள், பேச்சு விவரங்கள் குறித்து மூச்சு விடவில்லை என்றும் ஒரு தகவல். ஏன் இந்த இருட்டடிப்பு?

விடயம் மலிந்தால் சந்தைக்கு வரும்தானே...! அப்போது பார்த்துக் கொள்வோம்.

- மின்னல் -

# இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு!

கொழும்பு, மே 31

இந்த வருடத்தில் இது வரையிலான காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கையின் ரூபா 3.8 சதவீதத்தினால் வலுவடைந்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்நிலையில் , நேற்று முன்தினம் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 174.16 ரூபாவாக அமைந்திருந்தது. இதன் விற்பனை விலை 178.11 ரூபாவாகக் காணப்பட்டது.

கடந்த வருடம் காலாண்டுப் பகுதியில் இலங்கையின் ரூபா அமெரிக்க டொலருக்கு அமைவாக வீழ்ச்சி அடைந்து வந்தது.

இந்த வருடத்தில் முதல் காலாண்டுப் பகுதியில் அடிக்கடி இலங்கை ரூபா இவ்வாறு பெறுமதி வீழ்ச்சி அடைந்தபோதிலும் பொதுவாக ரூபாவின் பெறுமதி தற்போது அதிகரித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கை ரூபா குறுகிய காலத்தில் வீழ்ச்சி அடைந்தது. இருப்பினும் இந்த பின்னடைவில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஐ)

# இனவாதத்தைத் தூண்டி அதிகாரத்தை கைப்பற்ற மஹிந்த தரப்பினர் முயற்சி!

## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, மே 31

இனவாதத்தைத் தூண்டி மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் மஹிந்த தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சாட்டினார்.



வெலிமட பகுதியில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எதிர்க் கட்சியினர் அதிகாரத்துக்கு மீண்டும் வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதற்காகவே ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து இனவாதத்தைத் தூண்டும் விதத்தில் அவர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

பொதுமக்களின் அச்சத்தைப் பயன்படுத்தி இனவெறியைத் தூண்டி தேர்தலில் வெற்றிபெறுவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர் – என்றார். (ஐ)

# கிளிநொச்சியில் இன்று நீர் வெட்டு!

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி நகரில் இன்று காலை முதல் நாளை இரவு வரை நீர்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் விநியோகத் தாங்கி ஆகியவற்றில் முன்னெடுக்கப்படவுள்ள திருத்தப் பணிகள் காரணமாக இந்த நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# குருநாகல் வைத்தியரின் வீட்டில் தீவிர சோதனை!

கொழும்பு, மே 31

குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்தியர் சியாப்தீன் மொஹமட் சாபியின் வீடு, பாதுகாப்பு தரப்பினரால் நேற்றுமுன்தினம் சோதனையிடப்பட்டுள்ளது.

அநுராதபுரம் – கலாவெவ பிரதேசத்தில் உள்ள அவரது வீடு சோதனையிடப்பட்டபோதும், அங்கிருந்து சந்தேகத்துக்கிடமான எவ்வித பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியரின் தந்தை, நெருங்கிய உறவினர்களிடமும் பொலிஸார் வாக்கு மூலம் பெற்றுள்ளனர். (ஐ)

# தௌஹீத் ஜமாத் பள்ளிவாசல் உடைப்பு கவலைக்குரியது என்கிறார் ஹிஸ்புல்லா

கொழும்பு, மே 31

கெக்கிராவ பகுதியில் அமைந்துள்ள தௌஹீத் ஜமாத் பள்ளிவாசல் உடைக்கப்பட்டமைக்கு கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா கவலை வெளியிட்டுள்ளார்.

அத்தோடு பயங்கரவாதிகளின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு எவரும் இடமளிக்கக்கூடாது என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கெக்கிராவ பகுதியில் அமைந்துள்ள தௌஹீத் ஜமாத் பள்ளிவாசலை உள்ளூர் முஸ்லிம் மக்கள் இணைந்து நேற்று முன் தினம் உடைத்திருந்தனர்.

நூலகம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில், வெளிநாட்டு நிதியுதவியில் இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டிருந்ததென்றும் பிரதேச தௌஹீத் ஜமாத் செயற்பாடுகள் அங்கிருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்தன என்றும் பிரதேசவாசிகள் தெரிவித்திருந்தனர்.

இதன் காரணமாகவே பிரதேச முஸ்லிம் மக்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் ஊடகப்பிரிவு நேற்று ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே ஹிஸ்புல்லா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கெக்கிராவ, மடாடுகம பிரதேசத்தில் தௌஹீத்ஜமாத்பள்ளிவாசலைமுஸ்லிம் சகோதரர்களே சென்று உடைத்தார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் ஆழ்ந்த கவலை அடைகின்றேன்.

முஸ்லிம்களுக்கு மத்தியில் மத ரீதியான, கோட்பாடு ரீதியான பல்வேறுபட்ட பிரிவுகள் இருக்கலாம்.

அவைகளை இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பள்ளிவாசல்களை உடைப்பது தப்லீக், தௌஹீத், சூபிஸம், வஹாபிஸம், ஜமாஅத் இஸ்லாமி என்று எங்களுக்குள்ளே மோதிக்கொள்வது மிகமோசமான ஒரு பயங்கரமான செயலாகும்.

இவ்வாறான செயல்களினூடாக முஸ்லிம்கள் தங்களுக்குள்ளேயே மோதிக் கொண்டு தாங்களே அழிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் இன்று இந்தச் சம்பவங்களை ஏற்படுத்தியிருக்கின்ற பயங்கரவாதிகளின் குறிக்கோள்களாகும்.

ஆகவேதயவு செய்து எவரும் அதற்கு இடமளிக்கக்கூடாது. எங்களுக்குள்ளே மோதிக்கொள்வதன் ஊடாக ஒருபோதும் பிரச்சினைகளுக்குத்தீர்வுகாண முடியாது.

இவ்வாறான செயற்பாடுகள் மிக மோசமான நிலைமையை ஏற்படுத்துவதோடு கடந்த யுத்த காலங்களில் சகோதர இனம் தங்களுக்குள்ளேயே மோதிக் கொண்டதனூடாக எவ்வாறான விளைவுகளைச் சந்தித்தது என்பதை நாம் நன்கு அறிவோம்.

ஆகவே தயவு செய்து அவ்வாறு தமது இனத்துக்குள்ளேயே மோதல்களை ஏற்படுத்துவதற்கு யாரும் முயலக்கூடாது என்பதுடன் இலங்கையில் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதை தடுக்க வேண்டும் – என்றுள்ளது. (ஐ)

# ரவிக்கு எதிராக வழக்கு தொடர தயாராகின்றார் சட்டமா அதிபர்!

கொழும்பு, மே 31

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்கு தொடர விருப்பதாகச் சட்ட மா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

பிணை முறி மோசடி தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் பொய்யான சாட்சி வழங்கினார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் சி.ஐ.டியால் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட அரச சட்டத்தரணி இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ரவி மற்றும் அவரது மகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யவிருப்பதாகவும் அவர் தெரியப்படுத்தினார்.

வழக்கு விசாரணை ஜுன் மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன், அதன்போது இந்த விசாரணை தொடர்பான சி.ஐ.டியின் முன்னேற்ற அறிக்கையை முன்வைக்குமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தியது. (ஐ)

# தலவாக்கலை ஒலிரூட் தீ விபத்தில் 24 குடியிருப்புகள் முற்றாக தீக்கிரை



கொழும்பு, மே 31

தலவாக்கலை – ஒலிரூட் தோட்டத்தில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 24 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன.

அதுமட்டுமன்றி தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 24 வீடுகள் சேதமடைந்தன. இந்த வீடுகளில் குடியிருந்த 24 குடும்பங்களைச் சேர்ந்த 100 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 51 பேரும், பெண்கள் 49 பேரும், அடங்குகின்றனர்.

வீட்டில் இருந்தவாகள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

இதனையடுத்து தலவாக்கலை பொலிஸார், தலவாக்கலை லிந்துலை நகர சபை தீயணைப்பு படையினர், நுவரெலியா மாநகர சபை தீயணைப்புப் படையினர், மற்றும் பொது மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர். சுமார் 3 மணித்தியாலங்களுக்கு பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.



எனினும் சில வீடுகளில் இருந்த சில பொருள்களை மாத்திரம் அவர்களால் தீக்கு இரையாகாமல் வெளியில் கொண்டு வர முடிந்துள்ளது.

சில வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன.

இந்த தீ விபத்தினால் லயன் தொகுதியில் அமைந்திருந்த 24 வீடுகள் சேதமடைந்தன. இந்த வீடுகளில் குடியிருந்த 24 குடும்பங்களை சேர்ந்த 100 பேர் தற்காலிகமாக ஒலிரூட் தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகமும், தலவாக்கலை லிந்துலை நகர சபை ஊடாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கும் தலவாக்கலை பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

# மூன்னை இட்ட தீ!

ஈழத் தமிழர்களின் வாழ்வியலில் மிக மோசமான பண்பாட்டுப் படுகொலை அரங்கேறிய ஒரு காலகட்டத்தின் நினைவழியா நாள்களில் நாம் இப்போது நிற்கின்றோம்.

சரியாக 38 ஆண்டுகளுக்கு முன்னர் – அதாவது 1981 மே 31 ஆம் திகதி இரவும், அடுத்த நாள் ஜூன் முதலாம் திகதி இரவும் அந்தக் கொடூரங்கள் அரச பயங்கரவாதமாக யாழ்ப்பாண மண்ணிலே அரங்கேறின.

1981 மே 31 ஆம் திகதியன்று இரவுதான் யாழ்ப்பாண நகரத்தின் பிரதான வீதியில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் காரியாலயம், நகரின் மத்தியில் இருந்த பாய்க்கடைகள் மற்றும் சிறிய கடைகளைக் கொண்ட வர்த்தகக் கட்டடத் தொகுதி, முட்டாசுக் கடைச் சந்தியில் இருந்த விவேகானந்தா அச்சகம் உட்படக் கடைகள், யாழ் வேம்படி வீதியில் இருந்த யாழ்ப்பாணத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரனின் வீடு போன்றவை எல்லாம் காவலர்களாக வந்த 'காவாலிகள்' கூட்டத்தினால் தீயிடப்பட்டன.

அடுத்த நாள் ஜூன் முதலாம் திகதி யாழ்ப்பாண மக்களின் அறிவுக் களஞ்சியமான பொது நூலகம் பேரினவாதக் காடையர்களால் எரியூட்டப்பட்டது.

அதேவேளை, அப்போது வடக்குத் தமிழர்களின் ஏகோபித்த குரலாக – கருத்தியல் கருவூலமாக – வெளிவந்து கொண்டிருந்த 'ஈழநாடு ' நாளிதழின் அலுவலகமும் அதே சீருடை தரித்த 'காவாலிகளினால்' எரியூட்டப்பட்டு சாம்பரானது.

மற்றொரு நூல்தேட்டமான – தோட்டமான – பூபாலசிங்கம் புத்தகசாலையும் அதனுள் இருந்த பல்லாயிரம் நூல்களுடன் எரிக்கப்பட்டு வெந்தணலாகித் தணிந்தது.

தமிழர்களின் பாரம்பரியப் பதிவுகளை – பண்பாட்டுக் கோலங்களின் சித்திரங்களை – கலாசார சிறப்புகளின் எழுத்துருக்களை – சரித்திர ஆவணச் சான்றுகளை – வரலாற்று ஆதாரங்களை – துடைத்தழிக்கும் ஒரு கொடூர, கோர நடவடிக்கையே அப்போது அரங்கேற்றப்பட்டது என்பது மிக வெளிப்படையான உண்மை.

இனி மீளவே கிடைப்பதற்கரிய பழைமைச் சிறப்பு மிக்க நூல்கள், கையெழுத்து ஆக்கங்கள், காலத்தால் முந்திய அறிக்கைகள், சரித்திரப் பதிவுகளை எடுத்துரைத்து நிற்கும் துண்டுப் பிரசுரங்கள், பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழைமையான ஏட்டுச் சுவடிகள், ஆரம்ப கால நாளிதழ்கள் எனத் தமிழர்களின் அறிவுப் பொக்கிஷங்களான 97 ஆயிரம் புத்தகங்களுடன் தீயுடன் சங்கமமானது – அன்றைய நிலையில் தென்கிழக்கு ஆசியாவின் மிகப் பெரிய நூலகமாக மதிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகம்.

யாழ். நூலகம் , ஈழநாடு காரியாலயம் , பூபாலசிங்கம் புத்தகசாலை போன்றவற்றின் எரிப்பு என்பது வெறும் சடப் பொருள்களான நூல்களையும், ஆவணங்களையும், அறிக்கைகளையும், ஓலைச் சுவடிகளையும் அவற்றுடன் சேர்ந்து கட்டடங்களையும் நீறாக்கிய சம்பவம் மட்டும் அன்று. அதையும் தாண்டி, தமிழரின் தனித்துவத்துக்கு – அவர்களின் தனித்துவ தேசிய உணர்வுக்கு , கலாசார விழுமியங்களுக்கு, இவை எல்லாவற்றுக்கும் அப்பால், தமிழ்த் தேசிய உணர்வுக்கு ஆப்பு வைத்த சம்பவமாகும் அது; இலக்கு வைத்த வெறிச் செயல் அது.

இலங்கைத் தமிழர்கள் இந்த மண்ணில் தமது தேசியத்தை – தமது இனத்தின் இருப்பை – தமது தனித்துவத்தை – பேணிக் காப்பதாயின் அல்லது தக்க வைப்பதாயின் அதற்காக அவர்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்ற வரலாற்று உண்மையை – சரித்திரக் கட்டாயத்தை – உணர்வு பூர்வமாக அவர்களுக்கு உணர்த்தித் தமிழருக்கு வெஞ்சினத்தை ஊட்டி அவர்களைத் தட்டி, எழுப்பி, உசுப்பேற்றிய தொடர் சம்பவங்கள் இவை.

அது மாத்திரமல்ல, இலங்கை மண்ணின் சுதேசிகளான தமிழர்களுக்கு எதிராக மிக மோசமான இனவழிப்பு கொடூரம், இலங்கை அரசுப் படைகளினால் கனகச்சிதமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது என்ற கருத்தியல் உண்மையை உலகுக்குப் பறை சாற்றுவித்து, இலங்கையை நோக்கி முழு உலகத்தினதும் கண்களைத் திருப்ப வைத்த சம்பவமாகவும் இந்தப் பொது நூலக எரிப்பு விவகாரம் அமைந்தது.

அது வரை காலமும் தமது உரிமைகளுக்காக அறவழியில் போராடி வந்த தமிழர்கள் – குறிப்பாக தமிழ் இளைஞர்கள் – இனிமேல் மறவழியையும் நாடவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்படுகின்றார்கள் என்ற உண்மையையும் கூட அது உலகுக்கு எடுத்துரைக்கத் தவறவில்லை.

பின்னாள்களில் – 1983 ஜூலையில் – கொடும் ஆழிக்கூத்தாக ஆடிக் கலவரம் ஆடி அடங்கப் போகின்றது என்பதற்கு கட்டியம் கூறும் நிகழ்வாக இந்த நூலக எரிப்புச் சம்பவம் அமைந்தது என்று கூறலாம்.

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால் , காலம் காலமாக அது நிலைத்து நிற்கும் மண்ணிலிருந்து அந்த இனத்தை வேரோடும் , வேரடி மண்ணோடும் புரட்டிப் போட்டுத் தூக்கிக் கடாச வேண்டும். அதன் தாயக மண்ணில் இருந்து அந்த இனத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் புரட்டிப் போட்டுத் தூர எறிந்து அப்புறப்படுத்த வேண்டும்.

அந்த இனத்தின் தனித்துவ அடையாளங்களை, பண்பாட்டு கோலங்களை, பாரம்பரிய வழக்காறுகளைச் சிதைத்து அழிக்க வேண்டும். அந்த இனத்தின் தாயக மண்ணை ஆக்கிரமித்துச் சிதைக்க வேண்டும்.

அத்தகைய எத்தனங்களில் ஒன்றே யாழ் பொதுசன நூலக எரிப்பு!

# பல்கலை ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் அமைச்சர் ஹக்கீம் கரிசனை

கொழும்பு, மே 31

**ப**ல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான விசேட கொடுப்பனவுகள் மற்றும் சலுகைககளை உரிய விதத்தில் பெற்றுக்கொடுக்க தேவையான உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சர் ரவூப் ஹக்கீம் இணக்கம் தெரிவித்துள்ளார்.



பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீமை உயர்கல்வி அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து அவர்களின் தேவைகள் தொடர்பாகக் கலந்துரையாடிய போதே அமைச்சர் இவ்வாறு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டீசில்வா, அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே, மேலதிகச் செயலாளர் அத்தபத்து அமைச்சரின் இணைப்புச் செயலாளர் மன்சூர் ஏ.காதிர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான தொடர்பாடல் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக இங்கு வலியுறுத்தப்பட்டதுடன், ஓய்வு பெறும் போது சலுகை அடிப்படையில் வழங்கப்படும் வாகனக் கொள்வனவு அனுமதிப் பத்திரம் மேலும், தற்போது ஓய்வூதியம் பெறும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அக்ரஹார காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குதல் மற்றும் வீடமைப்புக் கடன் தொகையை இரண்டு மில்லியன் ரூபாவிலிருந்து மேலும் அதிகரிக்கச் செய்தல் முதலான கோரிக்கைகள் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளால் இதன் போது முன்வைக்கப்பட்டன.

மேலும், பல்கலைக்கழகங்களின் முன்னேற்றங்கள் மற்றும் சீரமைப்புகள் தொடர்பான பல்வேறு விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. அதாவது க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்கும் இடைக்காலத்தைக் குறைத்தல், பல்கலைக்கழக நிர்வாகசேவையினரை உள்வாரி சேவையாக பிரகடனப்படுத்துதல், தனியார் பல்கலைக்கழகங்களுக்கான உத்தேச சட்ட மூலம் தொடர்பான விடயங்கள், பல்கலைக்கழகங்களில் கடமையாற்றுபவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதி தொடர்பான விடயங்கள் மேலும், பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சம்பளம் தொடர்பான சுற்றறிக்கைகளை அமுல் நடத்துவதில் ஏற்படக் கூடிய சிக்கல்கள், மட்டக்களப்பு பல்கலைக்கழக விவகாரம், தற்காலிக உதவி விரிவுரையாளர்களுக்கான சம்பளத்திட்டம் என்பன தொடர்பாகவும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# அல்வாய் முத்துமாரியம்மன் ஆலய படுகொலையின் நினைவேந்தல்





யாழ்ப்பாணம், மே 31

வடமராட்சி பகுதியில் உள்ள அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த வடமராட்சி மக்கள் மீது ஷெல் வீச்சு நடத்தி படுகொலை செய்யப்பட்ட துன்பியல் நிகழ்வின் 32 ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்றுமுன்தினம் புதன்கிழமை படுகொலைக்குள்ளான பொதுமக்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி விசேட வழிபாடு மேற்கொள்ளப்பட்டது.

'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையை அடுத்து பாதுகாப்பான இடம் தேடி இடம்பெயர்ந்த வடமராட்சி மக்கள் பெருமளவில் தஞ்சமடைந்திருந்த அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு பலர் காயமடைந்திருந்தார்கள்.

சுமார் ஐம்பதுக்கு மேற்பட்டவர்களது உடல்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களால் பொறுப்பேற்கப்பட்ட நிலையில் உரிமை கோரப்படாத பதின்மூன்று உடலங்கள் உள்ளிட்ட சிதைவடைந்து உருக்குலைந்து போயிருந்த பலரது உடல் சிதைவுகள் ஓரிடத்தில் போட்டு ஆலய நிர்வாகத்தினரால் எரியூட்டப்பட்டிருந்தன.

இத்துன்பியல் சம்பவத்தின் 32 ஆவது ஆண்டை முன்னிட்டு வடமராட்சி மக்கள் சார்பில் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில், படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்மா சாந்தி வேண்டி விசேட பூசை வழிபாட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 5.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து நெய்த் தீபம் ஏற்றி வழிபாடு தொடர்ந்து நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# வன பாதுகாப்பு திணைக்களத்துக்கு ஜனாதிபதி மைத்திரி திடீர் விஜயம்

கொழும்பு, மே 31

வனப்பாதுகாப்புத்திணைக்களத்துக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதன் செயற்பாடுகளை பார்வையிட்டதோடு, அதனைத் தொடர்ந்து சிரேஷ்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

இராஜாங்க அமைச்சர் அஜித் மான்னப்பெரும, மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் துறை அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க, வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## நாளை

01.06.2019
சனிக்கிழமை
நட்சத்திரம்: திரியோதசி பி.ப. 05.09 வரை.
திதி : பரணி பி.இ.12.54 வரை.
இராகுகாலம் : 08.52 – 10.22
சுப நேரம் : 02.52 – 04.22

# புலிகள் இருக்கும் வரை மட்டுமே இலங்கை பாதுகாப்பாக இருந்தது

## சிவமோகன் எம்.பி. சுட்டிக்காட்டு



வவுனியா, மே 31

விடுதலைப்புலிகள் இருக்கும் வரை மட்டுமே இலங்கை பாதுகாப்பாக இருந்தது. இந்தியாவின் பாதுகாப்புகூட விடுதலைப் புலிகளின் கைகளிலேயே தங்கியிருந்தது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார் சிவமனோகன்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் அரசியல் நிலைமை என்பது மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்று ஒரு தேர்தல் கூட இவர்களால் இலகுவாக நடந்த முடியுமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஐ.எஸ். தீவிரவாதம் ஊடுருவியுள்ள நாட்டில் எப்படி இந்தத் தேர்தல்களைச் சுமுகமாக நடத்த முடியும். அது சவால்களுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இந்த அரசு மட்டுமல்ல இந்த நாடே சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இருக்கும் வரை மட்டுமே இந்த நாடு பாதுகாப்பாக இருந்தது. தேர்தல்கள் நடந்தன. எந்த அப்பாவி மக்கள் மீதும் அவர்கள் கை வைக்கவில்லை.

அவர்கள் படையினருக்கு எதிராகவே செயற்பட்டார்கள். அவர்கள் ஒரு படையதிகாரிக்கு எதிராக மேடையில் செயற்பட்டால் கூட ஒரு சிறு தொகை மக்கள்தான் பாதிக்கப்பட்டார்கள். இப்படி 400 பேரை பாதிக்கும் அளவுக்குப் புலிகள் செயற்படவில்லை. இலங்கை மட்டுமன்றி இந்தியாவின் பாதுகாப்பு கூட விடுதலைப் புலிகளின் கையிலேயே தங்கியிருந்தது. இதனை இந்தியாவும் சிந்திக்கும் காலம் வந்துவிட்டது. இன்று ஐ.எஸ். தீவிரவாதிகள் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச் செல்லும் நிலை உருவாகியிருக்கிறது. இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே இலங்கைத் தீவு அவசியமான ஒரு தீவு. ஆனால் அதனை இன்று உருக்குலைத்துவிட்டார்கள் – என்றார். (ஐ – 100)

# கிளிநொச்சியில் வாள்வெட்டு; 6 பேரை மடக்கியது பொலிஸ்

## முக்கிய சந்தேகநபர்கள் யாழ்ப்பாணத்துக்கு தப்பினர்

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி செல்வா நகர் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையகுற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைத்து விசாரிக்கப்படுகின்றனர். சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபர்கள் யாழ்ப்பாணத்துக்குத் தப்பியுள்ளனர் என்றுபொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த கர்ப்பிணிப் பெண் உள்பட ஒன்பது பேர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் இரவு கொழும்புவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி செல்வா நகர்ப் பகுதியில் உள்ள வீட்டுக்கு பட்டா ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் சென்ற 15க்கும் மேற்பட்டவர்கள் வீடு புகுந்து வாள் வெட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கர்ப்பிணி பெண் உட்பட ஆறு பெண்களும் மூன்று ஆண்களும் காயமடைந்தனர்.

அத்தோடு மோட்டார் சைக்கிள் ஒன்று எரிக்கப்பட்டதோடு, மற்றொரு மோட்டார் சைக்கிள் அடித்துச் சேதமாக்கப்பட்டது. ஒரு தற்காலிக வீடு எரிக்கப்பட்டது. இரண்டு வீடுகள், உடைமைகள் சேதமாக்கப்பட்டன. (ஐ)

# களனி பல்கலையின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனையவை மூடப்பட்டன

கொழும்பு, மே 31

களனி பல்கலைக்கழகத்தின் ராகம மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பீடங்களும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின்பின்னர்பல்கலைக்கழகம் கடந்த செவ்வாய் திறக்கப்பட்டது. மாணவர்களின் பாதுகாப்பு கருதி சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அத்துடன், பல்கலைக்கழகத்தின் சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட அனைத்து மண்டபங்களையும் இரவு 9 மணிக்குப் பின்னர் மூடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டனர். அதன் காரணமாக அனைத்து மாணவர்களின் பாதுகாப்பு கருதி பல்கலைக் கழகத்தை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக் கழகத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி விஜயாநந்த ரூபசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பல்கலைக் கழகத்தின் வார இறுதிக் கற்பித்தல் நடவடிக்கைகள் வழமைபோன்று இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வதந்திகளை நம்பவேண்டாம்!

## பொலிஸார் மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, மே 31

பாடசாலைகளின் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பாகப் பரவும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையெனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கூறியுள்ளார்.

பாடசாலைகளின் பாதுகாப்பு தொடர்பில் பொய்ப் பிரசாரம் பரப்பப்படுவதாகவும் அவை அடிப்படையற்றவை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதன் காரணமாக இவ்வாறான செய்திகளை நம்பவேண்டாமென பொதுமக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தினத்தன்று இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் பாடசாலைகளின் பாதுகாப்பு தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. சுமார் 2 வாரங்கள் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையிலே நேற்றுப் பாடசாலைகளுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பாக வதந்திகள் வெளியாகிய நிலையில் பொலிஸ் பேச்சாளர் இதனைக் கூறியுள்ளார். (ஐ)

# வெடிபொருள்கள் பொதி மொனராகலையில் மீட்பு

கொழும்பு, மே 31

மொனராகலை – தனமல்வில பிரதேசத்தில் வெடிபொருள்கள் அடங்கிய பொதி ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் நேற்றுக்காலை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட அந்தப் பொதியை மீட்டுள்ளனர்.

அதனைச் சோதனையிட்டபோதே அதனுள் பல வெடிபொருள்கள் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து அந்த இடத்தில் மேலும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

# ரிஷாத்துக்கு ஆதரவாக வாக்களிக்க கோடிக் கணக்கில் பணம் கைமாறு!

## மஹிந்தானந்த அளுத்கமகே குற்றச்சாட்டு



கொழும்பு, மே 31

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கச் சில தரப்பினருக்கு கோடிக்கணக்கிலான பணம் கைமாற்றப்படுவதாக மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர்மேலும்கூறுகையில்–

ரிஷாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கத் தற்போது கோடிக்கணக்கிலான பணம் கைமாற்றப்படுவதாக எமக்கு அறியக் கிடைத்துள்ளது. இதற்காக சிலருக்குப் பெரிய தொகைகள் வழங்கப்படுகின்றன.

இதனை நாடாளுமன்றில் கூறியபோது, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் மௌனமாக இருந்தார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிரோஷன் பெர்னாண்டோ மட்டும்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளார் எனவும் இதுதொடர்பிலான தனது முடிவை மாற்றிக்கொள்ளப் போவதில்லை என்றும் உறுதியாக இருந்தார்.

அரசையும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனையும் பாதுகாக்கவேண்டும் என்று பிரதமர் உள்ளிட்ட குழுவினரால் தற்போது பிரசாரமொன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ரிஷாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு முன்னர், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அரசைக் காப்பாற்றும் நோக்கிலேயே அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தார். அவருக்கு இதுதொடர்பில் தற்போது கருத்தொன்றைக்கூட வெளியிடமுடியாமல் போயுள்ளது.

எனவே, அமைச்சர் ரிஷாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் – என்றார். (ஐ)




## நான்கு முஸ்லிம் தலைவர்களை கைது செய்யுமாறு போராட்டம்

கொழும்பு, மே 31

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அஸாத் சாலி, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் ஆகியோரைக் கைது செய்து விசாரணை நடத்துமாறு கோரி தேசிய சுதந்திர முன்னணியினர் நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)



# கர்நாடகாவில் குமாரசாமி அரசு இரண்டொரு நாளில் கவிழுமாம்

## பா.ஜ.கவின் எடியூரப்பா ஆருடம்



கர்நாடக மாநிலத்தில் குமாரசாமி அரசு இன்னும் இரு தினங்களில் கவிழும் என பா.ஜ.கவின் மாநிலத் தலைவரும் முன்னாள் கர்நாடக முதல்வருமான எடியூரப்பா கூறியிருக்கின்றார்.

இது தொடர்பாக எடியூரப்பா பெங்களூருவில் கூறியவை வருமாறு: –

கர்நாடகாவில் சுயநலத்தின் அடிப்படையில் காங்கிரஸும், மத சார்பற்ற ஜனதா தளமும் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்துள்ளன. இந்த அரசால் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை. குமாரசாமியால் மக்களுக்கு நல்லது செய்ய முடியவில்லை என்றால் எதற்காகப் பதவியில் இருக்க வேண்டும்? பதவியை ராஜினாமா செய்துவிட்டு வீட்டுக்குப் போக வேண்டியதுதானே? காங்கிரஸ் அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தங்களது பதவியை இராஜினாமா செய்ய காத்திருக்கிறார்கள்.

விரைவில் பா.ஜ.கவில் இணையவும் முடிவெடுத்து இருக்கிறார்கள். எனவே குமாரசாமி தலைமையிலான காங்கிரஸ் – ம.ஜ.த. கூட்டணி அரசு இன்னும் இரு தினங்களில் கவிழ்ந்துவிடும். ஆட்சியை கவிழ்க்க வேண்டிய அவசியம் பா.ஜ.கவுக்கு இல்லை. நாங்கள் நல்லாட்சி வழங்க தயாராக இருக்கிறோம்.

தற்போது பா.ஜ.கவுக்கு 105 எம்.எல்.ஏக்களின் பலம் உள்ளது. 2 சுயேச்சை எம்.எல்.ஏக்கள் எங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த ஆட்சியை கவிழ்த்துவிட்டு புதிய தேர்தலை சந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. பா.ஜ.கவுக்கு ஆட்சி அமைக்கத் தேவையான 113 எம்.எல்.ஏக்களின் ஆதரவு கிடைக்கும் என உறுதியாக நம்புகிறேன். நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்ற பின்னர் கர்நாடகாவுக்கு நிறைய நன்மைகள் கிடைக்கும்" – என்றார்.

# காங்கிரஸுக்கு புதிய இடைக்காலத் தலைவர் கட்சியை மறுசீரமைக்க ராகுலின் புதிய வியூகம்



காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்வதில் பிடிவாதமாக இருக்கும் ராகுல் காந்தி கட்சியை வழிநடத்த புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இடைக்கால தலைவர் நியமனம் உட்பட கட்சியில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட இருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

மக்களவைத் தேர்தலின் தோல்வி குறித்து ஆய்வு செய்ய காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட அதிகாரம் கொண்ட செயற்குழுக்கூட்டம் புதுடில்லியில் நடந்தது. இதில் மூத்த தலைவர்களைக் கடுமையாகச் சாடிய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தோல்விக்குப் பொறுப்பேற்று தனது பதவியை இராஜினாமா செய்கிறார் என அறிவித்தார்.

ஆனால், மூத்த தலைவர்கள் ராகுலின் ராஜினாமாவை ஏற்க மறுத்துவிட்டனர். இருப்பினும் தனது முடிவில் மாற்றமில்லை என அவர் உறுதியாக உள்ளார். கட்சிக்குத் தனது குடும்பத்தினரை தவிர்த்து புதிதாக ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்குமாறு அவர் கூறி வருகிறார்.

ராகுல் காந்தி தனது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் எனக் காங்கிரஸ் மூத்த நிர்வாகிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், ராஜினாமா விடயத்தில் பிடிவாதமாக இருக்கும் ராகுல் காந்தி சில பரிந்துரைகளை கட்சி நிர்வாகிகளுக்கு அளித்துள்ளார் எனத் தெரிகிறது.

அதன்படி கட்சியின் அன்றாட பணிகளை வழி நடத்த குழு ஒன்றை உருவாக்க முடிவு செய்துள்ளார். அந்த குழுவுக்கு இடைக்கால தலைவர் ஒருவர் தலைமையேற்று செயல்படவும், அவருக்குத் துணை புரிய மூன்று செயல் தலைவர்கள் நியமிக்கப்படலாம் எனவும் தெரிகிறது.

கட்சியின் தேர்தல் பிரசாரம், செயல் திட்டம் அனைத்தையும் இந்தக் குழுவே வழிநடத்தும். ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் மட்டுமே கட்சியை வழிநடத்துவார். கட்சியின் இடைக்கால தலைவராக கே.சி. வேணுகோபால் பெயரை ராகுல் காந்தி பரிந்துரைத்துள்ளார் எனத் தெரிகிறது.

தென்னிந்தியாவில் குறிப்பாக கேரளாவில் அதிகமான இடங்களை காங்கிரஸ் வென்றுள்ளதால் தென்னிந்தியாவைச் சேர்ந்த ஒருவரை இடைக்காலத் தலைவராக நியமிக்க அவர் விருப்பப்படுகிறார் எனத் தெரிகிறது.

கட்சியை வழிநடத்தும் குழுவில் உள்ள செயல் தலைவர்களில் ஒருவராக பிரிதிவிராஜ் சவுகான் நியமிக்கப்படக்கூடும். அதுபோலவே ஜோதிராதித்ய சிந்தியாவும் இந்த பதவிக்கு நியமிக்கபடலாம் எனக் கூறப்படுகிறது.



# மாலைதீவு நாடாளுமன்றத்தில் உரையாற்ற மோடிக்கு அழைப்பு

மாலே, மே.31

மாலைதீவு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்த வருமாறு இந்தியப் பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 80 உறுப்பினர்களைக் கொண்ட அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லா சாகித், ஜூன் மாதம் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் மோடி மாலைதீவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளமையைச் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பயணத்தின் போது மாலைதீவுகளின் நாடாளுமன்றத்தில் உரையாற்றுமாறு மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றத்தில் மோடி உரையாற்றுவது மாலைதீவுக்கு தனி பெருமையை அளிக்கும் என அவர் தெரிவித்தார்.

# மோடியின் புதிய அரசுடன் அமெ. இணைந்து பணியாற்றத் தயார்!

## வொஷிங்டனில் அறிவிப்பு



வொஷிங்டன், மே31

இந்தியா மிகப்பெரும் கூட்டாளி; மோடியுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையே நல்லுறவு உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், பிரதமர் நரேந்திர மோடியும் பல முறை சந்தித்துப் பேசி உள்ளனர்.

இப்போது நடந்து முடிந்துள்ள இந்திய நாடாளுமன்ற தேர்தலில் பாரதீய ஜனதா கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றுள்ள நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை டிரம்ப் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்தினார்.

இந்த நிலையில் வொஷிங்டனில் அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் மோர்கன் ஆர்ட்டகஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர், இந்தியா மிகப்பெரும் கூட்டாளி. மோடியின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில், இந்திய வெளியுறவுத்துறை மந்திரியுடன் பரந்த அளவிலான பிரச்சினைகள் குறித்து வலுவான விவாதங்கள் நடத்த அமெரிக்க வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோ வாய்ப்பு எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் எனக் குறிப்பிட்டார்.

மீண்டும் பிரதமராக பதவி ஏற்க உள்ள மோடியுடன் அமெரிக்கா இணைந்து பணியாற்றுமா? எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு மோர்கன் ஆர்ட்டகஸ் பதில் அளிக்கையில், நிச்சயமாக நாங்கள் பல முறை இணைந்து செயல்பட்டது போல மோடியுடன் மீண்டும் இணைந்து பணியாற்றுவோம் எனக் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசும் போது, இந்தியாவில் நடந்த தேர்தலின் நேர்மை குறித்து எங்களுக்கு நம்பிக்கை உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே ஐ.நா. சபைக்கான முன்னாள் அமெரிக்க தூதர் நிக்கி ஹாலி டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், இந்தியா தொடர்ந்து வியக்கத்தக்க திறனையும், அமெரிக்காவின் மிகப்பெரும் கூட்டாளியாகவும் திகழ்கிறது. தேர்தலில் பெற்ற அமோக வெற்றிக்காகவும், இந்தியாவை முன்னோக்கிகொண்டு செல்லும் பாங்குக்காகவும் நரேந்திர மோடிக்கு வாழ்த்துக்கள். நமது ஒத்துழைப்பு தொடரும் என்று எதிர்பார்க்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு மாதத்துக்கு ரி.வி. விவாதங்களை அடியோடு தவிர்க்க காங்கிரஸ் முடிவு

## தேர்தல் தோல்வியின் விளைவு

புதுடில்லி, மே31

ஒரு மாதத்துக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் தொலைக்காட்சி விவாதங்களில் யாரும் பங்கேற்க மாட்டார்கள் என்று கட்சியின் செய்தித் தொடர்பாளர் ரந்தீப் சிங் சுர்ஜிவாலா கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது. கடந்த முறை பெற்றதை விட கூடுதல் எண்ணிக்கையில் ஜெயித்தது மட்டுமே ஆறுதல். அப்படியும் கூட எதிர்க்கட்சி அந்தஸ்து கிடைக்காத பரிதாப நிலை தொடர்கிறது.

இந்தப் பெரும் தோல்விக்குப் பொறுப்பேற்று காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து விலக ராகுல் காந்தி விரும்புகிறார். விருப்பத்தையும் தெரிவித்து விட்டார். யாரையும் சந்திக்காமல் இருந்து வருகிறார்.

காங்கிரஸ் கட்சியின் தோல்விக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அகில இந்திய அளவில் அது வலுவான கூட்டணியை ஏற்படுத்தத் தவறி விட்டது. குறிப்பாக உத்தரப் பிரதேசத்தில் அதன் கூட்டணி அணுகுமுறை பெரும் தவறி ழைத்து விட்டது. அதேபோலத் தான் ஆந்திரா, தெலுங்கானா எனப் பல மாநிலங்களிலும் அது சரிவர செயல்படவில்லை.



காங்கிரஸ் கட்சியின் அணுகுமுறைகள் ஒரு பக்கம் இருந்தால், அதன் கூட்டணிக் கட்சிகள் மற்றும் தோழமைக் கட்சிகள் பிரதமர் கனவோடு வலம் வந்தமையால் மக்கள் வெறுப்படைந்து பா.ஜ.கவுக்கு வாக்கைக் குத்தி விட்டனர். இதனால்தான் பா.ஜ.க. இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய வெற்றியைப் பெற்று விட்டது.

தனது பெரும் தோல்விக்கான காரணத்தையும், சுய பரிசோதனையிலும் தற்போது காங்கிரஸ் கட்சி இறங்கியுள்ளது. ஒருபக்கம் ராகுல் காந்தியை சமாதானப்படுத்தும் வேலைகள் நடந்து வருகின்றன. மறுபக்கம் தவறுகளை சரி செய்யும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்த நிலையில் காங்கிரஸ் கட்சி முக்கிய முடிவு ஒன்றை எடுத்துள்ளது.

ஒரு மாதத்திற்கு தொலைக்காட்சி விவாதங்களில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவை காங்கிரஸ் கட்சி எடுத்து அறிவித்துள்ளது. இதுதொடர்பாக அந்தக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ரந்தீப் சிங் சுர்ஜிவாலா வெளியிட்டுள்ள டிவீட்டில், ஒரு மாதத்திற்கு ரி.வி. விவாதங்களில் எங்களது செய்தித்தொடர்பாளர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள். எனவே அனைத்து மீடியா சேவைகள், ஆசிரியர்கள், எங்களது பிரதிநிதிகளை தொலைக்காட்சி விவாதங்களுக்கு அழைக்க வேண்டாம் – என்று கேட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikathir



# சிரியாவில் அரசுப் படைகள் நடத்திய தாக்குதலில் 21 பொதுமக்கள் மரணம்

## அவர்களில் ஒன்பது பேர் குழந்தைகளாம்



சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் சிரிய அரசுப் படைகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 21 பேர் கொல்லப்பட்டனர். இதில் 9 பேர் குழந்தைகள்.

இதுகுறித்து லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் கண்காணிப்புக் குழு, "சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இட்லிப் மாகாணத்தில் சிரிய அரசுப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இதில் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் பொதுமக்கள் 21 பேர் பலியாகினர். இதில் 9 பேர் குழந்தைகள். பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக சிரிய – ரஷ்யப் படைகள் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதலில் பொதுமக்கள் 229 பேர் பலியாகி இருக்கின்றனர் எனவும், 727 பேர் காயமடைந்து இருக்கின்றனர் எனவும் ஐ.நா.சபை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் சிரியாவில் பொதுமக்களைக் குறிவைத்துத் தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இதில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசு கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டு விட்டன. இந்த உள்நாட்டுப் போர் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அண்டை நாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளை மாளிகைக்கு முன் திடீரெனத் தீக்குளித்த நபர்

அமெரிக்க ஜனாதிபதியின் இல்லமான வெள்ளை மாளிகைக்கு முன்பாகத் திடீரென ஒருவர் தம் மீது பெற்றோலை ஊற்றித் தீக்குளித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பலத்த காயம் அடைந்த அந்த நபர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அந்த நபர் தீப்பிடித்து எரியும் வீடியோ காட்சி ஒன்று இணையதளங்களில் வைரலாகி வருகிறது

ஏற்கனவே மாற்றுத்திறனாளி ஒருவர் வெள்ளை மாளிகை முன்பாக தீக்குளிக்க முயன்ற சம்பவத்தை யடுத்து நிகழ்ந்த இச்சம்பவம் அமெரிக்க மக்களை அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது.




# சவுதி கப்பல்கள் தாக்கப்பட்டமையின் பின்னணியில் ஈரான் என்கின்றது அமெ.

நியூயோர்க்,மே31

சவுதி அரேபியக் கப்பல்கள் மர்மமான முறையில் தாக்குதலுக்கு இலக்கானமையின் பின்னணியில் ஈரான் உள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் ஓமன் வளைகுடா பகுதியில் அமைந்துள்ள புஜைரா துறைமுகத்தில் கடந்த 12 ஆம் திகதி, சவுதி அரேபியாவின் 2 எண்ணெய்க் கப்பல்கள் உள்பட 4 வெளிநாட்டு சரக்கு கப்பல்கள் மீது நாசவேலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தாக்குதல் நடத்தப்பட்ட விதம் மற்றும் அதன் பின்னணி குறித்து விரிவான தகவல்கள் வெளியிடப்படாத நிலையில், தாக்குதலில் ஈரானுக்கு தொடர்பு இருக்கலாம் என சவுதி அரேபியா சந்தேகம் தெரிவித்தது.

இந்த நிலையில், புஜைரா துறைமுகத்தில் நடந்த தாக்குதலின் பின்னணியில் ஈரான் இருப்பதாக அமெரிக்கா குற்றம்சாட்டி உள்ளது. இது குறித்து அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான்போல்டன் கூறுகையில், சவுதி அரேபியாவின் எண்ணெய் கப்பல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரானுக்கு தொடர்பு இருப்பதில் சந்தேகமே இல்லை என்றார்.

எனினும் இந்த குற்றச்சாட்டுக்கு அமெரிக்கா எவ்வித ஆதாரத்தையும் வெளியிடவில்லை. அதே சமயம் ஈரான் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

# உடற் பயிற்சிக்குப் பதிலாக ஊசி மூலம் தசை வளர்த்தவர்



பிரேசில் நாட்டில், ஊசி மூலம் தனது மேற்கைத் தசையை பெருமளவுக்குவளர்த்த ஆணழகனுக்கு மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சா பாலோ என்ற இடத்தைச் சேர்ந்த வால்டிர் செகாட்டோ என்பவர் உடற்பயிற்சி மீது தீராத காதல் கொண்டிருந்தார். இதற்காக உடற்பயிற்சி மையத்திற்குச் சென்று தனது உடலின் தசைகளை மேம்படுத்தினார்.

ஆனாலும் திருப்தியடையாத வால்டிர், தசை வளர்ச்சிக்கென பிரத்தியேகமான ஊசிகளைப் பயன்படுத்தத் தொடங்கினார். இதன் காரணமாக வால்டிரின் புஜத் தசைகள் கிட்டத்தட்ட 2 அடி சுற்றளவுக்கு வளர்ந்தன.

மேலும் அவரின் நெஞ்சுப் பகுதி கிட்டத்தட்ட ஒரு அடிக்கும் அதிகமாக வளர்ந்து ஒழுங்கற்ற முறையில் அமைந்துள்ளது.

வால்டிர் தொடர்ந்து இந்த ஊசிகளைப் பயன்படுத்தினால் அது அவரது உயிருக்கு ஆபத்தாக முடியும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# மூன்றே கால் லட்சம் கோடி ரூபா நன்கொடையாக வழங்கும் பெண்



வொஷிங்டன்,மே31

அமேசான் நிறுவனத்தின் தலைவரின் முன்னாள் மனைவி தனது சொத்தில் இருந்து சுமார் மூன்று லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாவை நன்கொடையாக வழங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலகப் பணக்காரர்கள் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர் அமேசான் நிறுவனத்தின் தலைவர் ஜெப் பெசோஸ் (வயது 55).

இவர், அமேசான் நிறுவனத்தை தொடங்குவதற்கு முன்பு நாவலாசிரியரான மெக்கின்சியை (48) காதலித்து, திருமணம் செய்துகொண்டார்.

இந்த தம்பதிக்கு 3 ஆண் குழந்தைகள் பிறந்த நிலையில், ஒரு பெண் குழந்தையை தத்தெடுத்து வளர்த்தனர்.

கடந்த சில ஆண்டுகளாகவே பிரிந்து வாழ்ந்து வந்த ஜெப் பெசோஸ் மற்றும் மெக்கின்சி ஆகிய இருவரும் கடந்த ஏப்ரல் மாதம் முறைப்படி விவாகரத்து பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து, ஜெப் பெசோஸ், தனது சொத்தில் 25 சதவீதத்தை மனைவி மெக்கின்சிக்கு ஜீவனாம்சமாகக் கொடுக்க முடிவு செய்தார்.

அதன்படி 3,500 கோடி அமெரிக்க டொலர்களை (இலங்கை நாணய மதிப்பில் சுமார் ஆறே கால் லட்சம் கோடி ரூபா) மெக்கின்சிக்கு வழங்குவார் என அவர் அறிவித்தார்.

இதன் மூலம் உலகிலேயே அதிக தொகையை மனைவிக்கு ஜீவனாம்சமாக கொடுத்தவர் என்கிற பெருமைக்கு ஜெப் பேசோஸ் சொந்தக்காரர் ஆனார்.

அதே போல் கணவரிடம் இருந்து அவ்வளவு பணம் பெற்றமை மூலம் மெக்கின்சி, உலகின் 3 ஆவது மிகப்பெரிய பெண் பணக்காரர் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார்.

மெக்கின்சியின் தற்போதைய சொத்து மதிப்பு சுமார் 3 ஆயிரத்து 700 கோடி டொலர்களாக உள்ளது.

இந்த நிலையில் தனது சொத்தில் சரிபாதி தொகையை தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடையாக வழங்குவதாக மெக்கின்சி உறுதிமொழி அளித்துள்ளார்.

அதாவது 1,850 கோடி டொலர்களை (சுமார் ரூ. 3 லட்சத்து 30ஆயிரம் கோடி) நன்கொடையாக வழங்க இருக்கிறார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நான் வாழ்வதற்கு தேவையானதை விட கூடுதலாக, பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு அதிகமான சொத்துகள் என்னிடம் உள்ளன என குறிப்பிட்டுள்ளார். மெக்கின்சியின் இந்த கொடை உள்ளத்தை அவரது முன்னாள் கணவர் ஜெப் பெசோஸ் பாராட்டி உள்ளார்.

# பஸ் – கெண்டெய்னர் லொறி மோதி தீப் பிடித்து எரிந்ததில் 20 பேர் சாவு

## மெக்ஸிகோவில் பரிதாபம்





மெக்ஸிகோவில் பயணிகள் பஸ் ஒன்று கெண்டெய்னர் லொறியுடன் நேருக்கு நேர் மோதி, தீப்பிடித்ததில் ஏற்பட்ட விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

தென்கிழக்கு மெக்ஸிகோவில் உள்ள வெராக்ரஸ் (Veracruz) மாகாணத்தில் கிறிஸ்தவ யாத்திரைப் பயணிகளை ஏற்றி வந்த பஸ்ஸும், பொருள்களை ஏற்றி வந்த கெண்டெய்னர் லொறியுமே நேருக்கு நேர் மோதிக் கொண்டன. மோதிய வேகத்தில் இரு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தன. இந்த விபத்தில் பஸ் மற்றும் கெண்டெய்னரில் பயணம் செய்த இருபதுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. இதுகுறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikathir





# புகைப்பதை தவிர்த்து புற்றுநோயிலிருந்து தப்பிக் கொள்ளுங்கள்!



இன்று உலக புகையிலை எதிர்ப்புத்தினம் ஆகும். உலகம் முழுவதும் வருடந்தோறும் மே, 31ஆம் திகதி சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் ஆக(World No Tobacco Day) அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளில், சில சமூக அமைப் புகள் புகையிலை பயன்படுத்துவதால், புகை பிடிப்பதால் ஏற்படும் புற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் பற்றி பொது மக்களிடம் எடுத்துச்சொல்வதை வாடிக்கையாகக் கொண்டுள்ளன.

அவர்கள் எலும்புக்கூடு முகமூடி அணிந்துக் கொண்டு, புகை, மற்றும் மது குடிப்பதால் ஏற்படும் அபாயங்களை விளக்குகிறார்கள்.

கடந்த 1987 இல் உலக சுகாதார நிறுவனம் ( WHO) மே - 31 ஆம் நாளை உலக புகை எதிர்ப்பு தினமாக அறிவித்தது.

ஆண்டுதோறும் சுமார் 55 லட்சம் பேர் புகைப் பழக்கத்தால் இறந்து வரு கிறார்கள். இவர்களுள் 10 லட்சம் பேர் இந்தியர்கள். 15 வயதிற்கு மேற்பட்ட ஆண்களில் 57% பேரும், பெண்களில் 10.8% பேரும் புகையிலையை ஏதோ ஒரு வடிவில் உபயோகிக்கின்றனர். புகையிலையினால் ஏற்படும் வாய்புற்று நோய் லட்சத்திற்கு இந்தியாவில் 10 பேரை பாதிக்கிறது. 2020 - ஆம் ஆண்டில் இந்தியாவில் 13% மரணங்களுக்கு புகையிலைபழக்கம் காரணமாக அமையும் என புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

## புகையிலையைப் பாவிப்பதால் ஏராளமான அபாயங்கள்



உலகில் ஆண்கள் 47%, பெண்கள் 12% புகைப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளார்கள். வளர்ந்த நாடுகளில் 42% ஆண்களும் 24% பெண்களும், வளரும் நாடுகளில் 48% ஆண்களும் 7% பெண்களும் புகைபிடிக்கின்றனர். இந்தியாவில் 53% ஆண்களும் 3% பெண்களும் புகைப்பழக்கத்திற்கு அடிமையாக இருப்பதாகத் தகவலகள் தெரிவிக்கின்றன.

எய்ட்ஸ் நோய் (எச்.ஐ.வி.), காசநோய், வாகன விபத்துகள், தற்கொலைகள், கொலைகள் போன்றவற்றால் ஏற்படும் மரணத்தைவிட புகையிலையினால் ஏற்படுவது அதிகமாக இருக்கிறது.

புகைபிடிப்பது மூலம் வாய், நுரையீரல், சிறுநீரகம், மார்பகம் ஆகியவற்றில் புற்றுநோய், ஆஸ்துமா, காசநோய், இதயநோய், உயர் ரத்த அழுத்தம், செவிட்டுத் தன்மை, மலட்டுத்தன்மை என பல நோய்கள் வருகின்றன.

தொடர் புகைப் பழக்கத்தால் நுரையீரல் புற்றுநோய் விரைவிலேயே வருகிறது. புற்று நோய், இதய நோய் ஆகியவற்றை புகைப் பழக்கம் 30 சதவீதம் அதிகரிக்கிறது என்று கண்டறியப்பட்டிருக்கிறது. புகைப் பழக்கத்திற்கு உலகம் முழுவதும் பல கோடிக்கணக்கானவர்கள் அடிமையாகியுள்ளனர். உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் 15 வயதிற்கு மேற்பட்டவர்களான இவர்கள்தான் அதிகமாக புகை பிடிக்கிறார்களாம்.

**49 லட்சத்தில் குறையும் ஆயுள்...**

தினம் ஒரு சிகரெட் பிடித்தால் ஒருவரின் வாழ்க்கையில் தினமும் 5 நிமிடங்கள் குறைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புகை பிடிப்பதால் அல்லது பிறர் பிடிக்கும் சிகரெட், பீடி ஆகியவற்றின் புகையை நுகர்வதால் இருமல், சளி உருவாகி ஆஸ்துமா பிரச்சினை வருகிறது. ஆஸ்துமா இருப்பவர்கள் புகை பிடித்தால், அது ஆஸ்துமாவை மேலும் அதிகரித்து, மூச்சுத் திணறலை உருவாக்கி உயிருக்கே உலை வைக்கிறது.

கர்ப்பிணி பெண்கள் புகைபிடித்தால் அது கர்ப்பத்தில் இருக்கும் சிசுவை பாதிக்கும்.

சிலர், பெற் றோர், உறவினர், நண்பர்கள், திரைப்பட நட்சத்திரங்கள் போன்றவர்களை பார்த்துப் புகைபிடிக்கிறார்களாம். ஒருவர் புகை பழக்கத்தை நிறுத்தினால் இதய நோய், நுரையீரல் புற்றுநோய், நுரையீரல் நோய்கள், வலிப்பு நோய் போன்றவை படிப்படியாக குறையும் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

புகை பழக்கத்தைக் கை விட்டு 10 -15 ஆண்டுகள் கழித்துதான் மனிதன் முழு ஆரோக்கியம் பெறுகிறான். அது வரைக்கும் அதன் பாதிப்பு உடலுக்குள்ளே இருந்து கொண்டே தான் இருக்கும்.

தாய்லாந்து, தைவான், மலேசியா போன்ற நாடுகளில் வயது வந்தோருக்கு மட்டுமே கண்டிப் பாக பீடி, சிகரெட் போன்றவை விற்பனை செய்ய வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அது தீவிரமாகவும் அமுல்படுத்தப் படுகிறது. இதனால், அங்கு சிறுவர்கள் புகைப்பது என்பது அரிதாகவே காணப்படுகிறது.

புகை பிடிப்பவர்களை அதிக அள வில் கொண்டுள்ள நாடுகளில் உலகில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் ஆரோக்கிய பராமரிப் புக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 9 சதவிகிதம் செலவிடப் படுகிறது.

அதேநேரத்தில், இந்தியாவில் இது வெறும் 3% ஆக இருக்கிறது.

**மனது வைத்தால் சாத்தியமே...**

புகை பிடிப்பதை நிறுத்துவது என்பது கஷ்டமான காரியமல்ல. மனதிருந்தால் மார்க்கமுண்டு. புகை பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் போது நூலகம், கோவில், தியானம் என்று மனதை திசை மாற்ற பழகிக் கொண்டாலே போதும்.

*

# முல்லைத்தீவு செயலகத்தில் செயலமர்வு











இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி கருத்தரங்கு ஒன்று நேற்றுமுன்தினம் முல்லைத் தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது

UNDP நிறுவனம் சர்வோதய நிறுவனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியன இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இளம் தொழில் முயற்சியாளர்களுக் கான ஒரு நாள் பயிற்சி கருத்தமர்வு ஒன்றை நடத்தியிருந்தது

இந்த பயிற்சி பட்டறையில் இளைஞர்களுக்கானசுயதொழில் முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பா கவும் சுய தொழிலின் ஊடாக முன்னேறிய அனுபவம் வாய்ந்தவர்களால் கருத்தமர்வு நடத்தப்பட்டது

சர்வோதய நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப் பாளர் எஸ் சத்தியகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவி பணிப் பாளர் தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் மற்றும் சர்வோதயம் UNDP ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மாந்தை கிழக்கு ‘ஒட்டுசுட்டான்’, ‘கரைதுறைப்பற்று’ புதுக்குடியிருப்பு ஆகிய ஐந்து பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 100 இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்

# குடாநாட்டில் கல் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, மே 31

யாழ். மாவட்டத்தில் கட்டுமானம் மற்றும் இதர தேவைகளுக்கு ஏற்பட்டுள்ள கல் தட்டுப் பாட்டை நீக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந் தாவுக்கும் இடையில் சந்திப் பொன்று இடம்பெற்றது. இதன் போது, யாழ்ப்பாணத்தில் திடீரென ஏற்பட்டுள்ள கல் தட்டுப்பாடு குறித்து டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து குடாநாட்டுக்குக் கல் கொண்டு வருவது தடை செய்யப்பட்டிருந்தது. இதனால் கட்டுமானப் பணிகளில் தடங்கல் ஏற்பட்டிருந்தது.

இந்த விவகாரத்தில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, மாவட்ட செயலரின் ஊடாக பிரதேச செயலர், கிராம சேவகரின் சிபாரிசுடன் கல் பெறும் ஏற்பாட்டை மேற் கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (ஐ)

# சிங்கள மக்களின் வாக்குகளுக்காகவே ஞானசாரரை விடுவித்தார் மைத்திரிபால

## கூறுகின்றார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

வவுனியா, மே 31

ஞானசார தேரரை விடுவித்தால் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் அவரை வைத்து அரசியல் செய்யும் சில அரசியல் தலைவர்களின் செல்வாக்கைக் குறைக்க முடியும் என்று கருதியே ஜனாதிபதியால் ஞானசார தேரர் விடுவிக்கப்பட்டுள்ளார் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.



ஞானசார தேரரின் விடுதலை தொடர்பில் ஊடகவியலாளர் நேற்று எழுப்பிய கேள்வியொன்றுக்குப்பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எல்லாம் தேர்தல் மயம். காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியை நீதிமன்றத்தில் நீதிபதியின் முன் மிரட்டியதற்காக நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு 19 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர் ஒன்பது மாதங்களில் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால் என்ன குற்றத்துக்காகச் சிறையில் இருக்கிறோம் என்பதே தெரியாத பல தமிழ் அரசியல் கைதிகள் 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். இந்த நாட்டின் அரசமைப்பும், சட்டமும் சிங்களவர்களுக்கு ஒரு விதமாகவும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஒரு விதமாகவும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்பதற்கு இது ஒரு சிறிய உதாரணம். இதைப்போல் பல உதாரணங்களை சுட்டிக்காட்டமுடியும்.

அதே நேரம் நீதி அமைச்சர், தேரர்கள் சாதாரண நீதிமன்றங்களின் வாயிற் படியை மிதிப்பதை என்னால் சகிக்க முடியவில்லை என்றும் அவர்களுக்காகத் தனியான நீதிமன்றம் அமைக்கப்படும் என்றும் கூறுகிறார். பௌத்தமதத் துறவிகள் குற்றம் செய்யாதிருக்கவேண்டும் என்பது அவரது வேண்டுகோள் அல்ல. மாறாகக் குற்றம் செய்த பிக்குகளை விசாரிப்பதற்குத் தனி நீதிமன்றம் அமைப்பதே அவரது விருப்பமாக உள்ளது. இதிலிருந்து இந்தநாட்டில் சிங்கள பௌத்தபேரினவாதிகளைத் தவிர ஏனையோர் அடிமைகளாக வாழவேண்டும் என்பது புலனாகிறது. ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்துக்கு இனிமேலும் உள்நாட்டுக்குள் நீதியும் அரசியல் தீர்வும் கிட்டும் என்று இனியும் யாராவது நம்பினால் அது அவர்களின் அறிவின்மையின் வெளிப்பாடாகவே அமையும்.

அத்துடன், ஞானசார தேரரை விடுவித்தால் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேவேளை அவரை வைத்து அரசியல் செய்யும் சில அரசியல் தலைவர்களின் செல்வாக்கைக் குறைக்க முடியும் என்று ஜனாதிபதி நம்பியிருக்கலாம். சிங்கள மக்களின் முழுமையான வாக்குகளை உறுதி செய்துகொண்ட பின்னரே தமிழ் மக்கள் மீது கவனம் செலுத்தப்படும். சிங்கள மக்களின் வாக்கு வங்கியில் ஏற்படும் வீழ்ச்சியினூடாகவே தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானிக்கும் சக்தியாக அமையும். எனவே சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதே தற்போது ஜனாதிபதிக்கு உள்ள ஒரே தெரிவு. இலங்கையில் ஒரு போதும் சமமான நீதி, சமத்துவமான ஆட்சி நேர்மையான சட்டவாட்சி என்பனவற்றை எதிர்பார்க்க முடியாது என்பதற்கு இதுவும் ஒரு சிறந்த உதாரணம்.

தாயை இழந்து தவிக்கும் ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளிடம், உங்களது தந்தை விரைவில் வீடு திரும்புவார், உங்களது உணர்வுகளைப் புரிந்துகொள்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்து தன்னை மிகவும் நேர்மையானவராகவும், தூய்மையானவராகவும் காட்டிக்கொள்ளும் ஜனாதிபதியே அதனை மீறியிருக்கிறார்.

இத்தனைக்கும் அவர் ஆட்சிக் கட்டிலில் ஏறுவதைத் தீர்மானிக்கும் சக்திகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாக தமிழ்த் தேசிய இனம் இருந்திருக்கிறது. அதற்காகவேனும் அவர் ஆனந்த சுதாகரனை விடுவித்திருக்கலாம். அல்லது தான் வாக்குறுதி அளித்ததற்காகவாவது விடுவித்திருக்கலாம். ஆனால் எதுவும் நடக்கவில்லை. ஏழைச் சிறுமியின் வீட்டுக்குச் சென்று தன்னை குழந்தைகளின் மீது அன்பு கொண்டவராக வெளிப்படுத்திய ஜனாதிபதிக்கு ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் குழந்தைகளாகத் தெரியவில்லை போலிருக்கிறது – என்றார். (ஐ – 100)

## இலங்கையிலிருந்து படகில் சென்ற 20 பேரை மடக்கிய ஆஸ்திரேலியா



கொழும்பு, மே 31

ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சென்ற 20 இலங்கையர்களை நடுக்கடலில்வைத்து இடைமறித்த ஆஸ்திரேலியக் கடற்படை, அவர்களை விமானம் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளது.

கடற்படையினரால் மீட்கப்பட்டவர்களில் ஒரு குழந்தையும் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஈஸ்டர் தற்கொலைக்குண்டு தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர் – மே மாத முற்பகுதியில் – அங்கிருந்து புறப்பட்டதாக கருதப்படும் இந்தப் படகு ஆஸ்திரேலியக் கடற்படையினரால் கடந்த வாரம் இடைமறிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நடுக்கடலில் வைத்துப் பிடிக்கப்பட்ட அனைவரும் அண்மையில் மீளத்திறக்கப்பட்ட கிறிஸ்மஸ் தீவு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன. பின்னர், அனைவரதும் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து சிறப்பு விமானம் மூலம் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து வருடங்களின் பின்னர் கிறிஸ்மஸ் தீவுகளுக்குச் சென்ற முதலாவது அகதிகள் படகு இது என்று குறிப்பிடப்படுகின்றது. ஆஸ்திரேலியாவுக்கு அகதித் தஞ்சம் கோரி சென்றவர்கள், 2013இல் இருந்து இது வரை 186 பேர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்திய புலனாய்வுக் குழு கொழும்பு வந்து சேர்ந்தது

கொழும்பு, மே 31

இலங்கையில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இந்திய தேசியப் புலனாய்வுப் பிரிவின் குழு ஒன்று வந்துள்ளது.

இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் மா அதிபர் ஆலோக் மிட்டல் தலைமையில் இந்த குழு இலங்கை வந்துள்ளது.

அவர் தென்னிந்தியாவில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் குறித்து பல்வேறு கால கட்டங்களில் விசாரணைகளை நடத்தியுள்ளார்.

பயங்கரவாதி சஹ்ரான் வெளியிட்ட காணொளிகளை பின்தொடர்ந்தவர்கள் தொடர்பிலும் அவர் விசாரணைகளை நடத்தியுள்ளார்.

இந்த விசாரணைகளில் கிடைக்கப்பெற்ற தகவல்களை இலங்கையில் விசாரணை நடத்துகின்ற குழுக்களிடம் அந்தக் குழுவினர் பகிர்ந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மேலும் 80 வெளிநாட்டு அகதிகளை வவுனியா கொண்டுவர நடவடிக்கை

வவுனியா, மே 31

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு அகதிகள் மேலும் 80 பேரை வவுனியாவுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலையடுத்து நீர்கொழும்பில் தங்க வைக்கப்பட்டிருந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சிரியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 1,670 வெளிநாட்டு அகதிகளை வேறு பகுதிகளில் தங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களின் எதிர்ப்பையும் மீறி கடந்த 22 ஆம் திகதி 35 வெளிநாட்டு அகதிகள் வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டுப் பூந்தோட்டம் பகுதியில் உள்ள வடக்கு – கிழக்கு மாகாணக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் இயங்கும் புனர்வாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களைத் தங்க வைப்பதற்கு பௌத்த மதகுருமார் அண்மையில் கடும் எதிர்ப்பை வெளியிட்டு முகாமுக்குள் நுழைய முற்பட்ட நிலையில் இராணுவமும்,பொலிஸாரும் இணைந்து அவர்களை வெளியேற்றியிருந்தனர்.

இந்நிலையில் மேலும் 80 வெளிநாட்டு அகதிகளைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இவர்கள் நேற்று இரவு அங்கு கொண்டுவரப்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. (ஐ – 100)

## முல்லைத்தீவில் வறட்சியால் 12, 000 குடும்பங்கள் பாதிப்பு!

முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியால் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது நிலவி வரும் வறட்சி நிலை காரணமாக எங்கள் மாவட்டத்திலும் மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பான விவரங்கள் எமக்கு அறிக்கையிடப் பட்டிருக்கின்றன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 296 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 10 ஆயிரத்து 799 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 797 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான குடிதண்ணீர் வசதிகளை இடர் முகாமைத்துவ அமைச்சு ஊடாக வழங்கி வருகின்றோம் – என்றார். (ஐ)



# கரவெட்டி பிரதேச செயலகம் கிரிக்கெட்டில் சம்பியனானது

யாழ்ப்பாண மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் கரவெட்டி பிரதேச செயலகம் சம்பியனானது.

கல்வியங்காடு ஸ்ரீ ஞானபாஸ்கரா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் உடுவில் பிரதேச செயலகத்தை வென்றே கரவெட்டி பிரதேச செயலகம் சம்பியனானது.

10 ஓவர்கள் கொண்ட இத்தொடரில் முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி பிரதேச செயலகம், 10 ஓவர்களில் 74 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அனுரதன் 28, கோகுலன் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.



பதிலுக்கு, 75 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய உடுவில் பிரதேச செயலகம், 10 ஓவர்களில் ஏழு விக்கெட்டுகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

# சச்சினின் புது அவதாரம்



இங்கிலாந்தில் தொடங்கும் உலகக்கிண்ணத் தொடரில், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் வர்ண னையாளராகச் செயல்டுகின்றார்.

12ஆவது உலகக்கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நேற்றுத் தொடங்கியது. கிரிக்கெட்டின் மாஸ்டர் பிளாஸ்டர் வீரர் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர், ஒரு உலகக்கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற சாதனையை, 2003ஆம் ஆண்டு (673 ஓட்டங்கள்) படைத்தார்.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, கிரிக்கெட் தொடர்பான கருத்துக்களை தெரி வித்து வந்த சச்சின், ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்கு ஆலோசகராகவும் செயல்பட்டு வருகிறார். இந்நிலையில், நேற்று நடந்த உலகக் கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் வர்ணனையாளராக அறிமுகமா கினார். ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் அவர் வர்ணனையாளராகச் செயல்படுகிறார்.

இதனைத் தொடர்ந்து அவரது ரசிகர்கள் ட்விட்ட ரில் வாழ்த்துக்களைப் பதிவிட்டுவருகின்றனர். (ஐ)

# ரோஹித் – தவானின் துடுப்பாட்டம்; கவலைப்பட தேவையில்லையாம்



இந்தியக் கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான ரோஹித் சர்மா மற்றும் ஷிகர் தவானின் துடுப்பாட்டம் குறித்து கவலைப்படவேண்டிய தேவையில்லை என அணியின் தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், இருவரும் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

ஆகையால் இவர்களின் துடுப்பாட்டம் குறித்து விராட் கோஹ்லியிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த கோஹ்லி,

நான்காவது வரிசையில் களம் இறங்கிய லோகேஷ் ராகுல் விளையாடிய விதம் மிகப்பெரிய நம்பிக்கையை அளித்து இருக்கிறது. அணியில் இடம் பெற்றுள்ள அனைவரும் தங்களது பணி என்ன என்பதை அறிந்து இருப்பார்கள். லோகேஷ் ராகுல் ஓட்டங்கள் குவித்தது முக்கியமானதாகும். அவர் ஒரு தரமான வீரர். டோனி, ஹர்திக் பாண்ட்யா ஆகியோரும் மிகவும் நன்றாக விளையாடினார்கள்.

முதலில் விளையாடிய இரண்டு பயிற்சி போட்டிகளும் சவாலாக இருந்தன. ஷிகர் தவான், ரோஹித் சர்மா ஆகியோர் தரமான வீரர்கள். அவர்களின் திறமை குறித்து கவலைப்பட வேண்டிய தேவையில்லை.

ஐ.சி.சி. போட்டியில் இருவரும் நட்சத்திர வீரர்கள். போகப்போக இருவரும் நல்ல நிலைக்கு வந்து விடுவார்கள்.

பயிற்சிப் போட்டியில் உத்வேகம் பெற வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அந்த அளவுக்கு அதிகமான போட்டிகளில் நாங்கள் விளையாடி இருக்கிறோம். 2 போட்டிகளிலும் எங்களது செயற்பாடு மகிழ்ச்சி அளிக்கிறது. பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர்கள் சவால் அளிக்கும் வகையில் விளையாடினார்கள். எங்களது பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசினார்கள்.

ஜஸ்பிரிட் பும்ரா ஆரம்ப விக்கெட்டுகளை வீழ்த்தினார். யுஸ்வேந்திர சாஹல், குல்தீப் யாதவ் ஆகியோர் இணைந்து 6 விக்கெட்டுகளை கைப்பற்றினார்கள். 2ஆவது பாதியில் பந்து சற்று சுழல வாய்ப்பு உள்ளது.

இருப்பினும் அதன் முதல் 15 ஓவர்களில் பந்தை ஸ்விங் செய்வது முக்கியமானதாகும். நாணய சுழற்சியில் வெற்றிபெற்றால் பெரும்பாலான அணிகள் சேசிங் செய்வதையே விரும்பும் – என்றார்.

இந்தியா அணி, தனது பயிற்சிப் போட்டியில், நியூஸிலாந்து அணியிடம் படுதோல்வியைச் சந்தித்தது. ஆனால் பங்களாதேஷ் அணியுடனான இரண்டாவது பயிற்சிப் போட்டியில் நிதானமாக துடுப்பெடுத்தாடி வெற்றிபெற்றது.

பங்களாதேஷ் அணியுடனான போட்டியில், கே.எல். ராகுல் மற்றும் டோனி ஆகியோர் சதம் அடித்து அசத்தினர்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில், இந்தியா தனது முதல் போட்டியில் ஜூன் 5ஆம் திகதி தென்னாபிரிக்கா அணியை எதிர்கொள்கிறது.

# நீளம் பாய்தலில் தர்மிகா முதலிடம்

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக் கிடையிலான பெண்களுக் கான நீளம் பாய்தலில், உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. தர்மிகா முதலிடம் பெற்றார்.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடை யிலான மெய்வல்லுநர் போட்டி, யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்ற நிலையில் நீளம் பாய்தல் போட்டியில் 4.74 மீற்றர் தூரம் பாய்ந்து கே. தர்மிகா முதலிடம் பெற்றார்.

இப்போட்டியில் 4.69 மீற்றர் தூரம் பாய்ந்திருந்த நல்லூர் பிரதேச செயலகத் தைச் சேர்ந்த பி. சகானா இரண்டாமிடம் பெற்றதோடு, 4.41மீற்றர் தூரம் பாய்ந்த பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. நிரோசினி மூன்றாமிடத் தையும் பெற்றனர்.


## பெறுகை அறிவித்த
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## சபை நிதி 2019

01.தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02.பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(ii) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபாரப் அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03.தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 31.05.2019 தொடக்கம் 14.06.2019 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.3000/- (NBT,VAT தவிர்ந்த)செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். .

05.பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 14.06.2019ம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 07.06.2019 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்

07.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு ரூபா | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பாடசாலை 3ம் குறுக்கு வீதி புனரமைப்பு (துரை ஒழுங்கை) | 0.28 | 2 மாதம் | C9 & C8 | 3,000.00 | 29.08.2019 |
| 2 | சுன்னாகம் சந்தை மேற்கு வீதி புனரமைப்பு | 0.56 | 2 மாதம் | C9 & C8 | 6,000.00 | 29.08.2019 |
| 3 | யாமா தலைவாசல் ஒழுங்கை புனரமைப்பு | 1.24 | 2 மாதம் | C9 & C8 | 12,500.00 | 29.08.2019 |
| 4 | சைவமகாஜனா 2ம்குறுக்கு வீதி புனரமைப்பு ஏழாலை | 0.66 | 2 மாதம் | C9 & C8 | 7,000.00 | 29.08.2019 |
| 5 | மயிலங்காடு சீமாட்டி வீதி புனரமைப்பு | 0.61 | 2 மாதம் | C9 & C8 | 6,500.00 | 29.08.2019 |
| 6 | புளியடி வைரவர் குறுக்கு வீதி புனரமைப்பு | 1.23 | 2 மாதம் | C9 & C8 | 12,500.00 | 29.08.2019 |
| 7 | கலட்டி வீதி புனரமைப்பு | 1.12 | 2 மாதம் | C9 & C8 | 11,500.00 | 29.08.2019 |
| 8 | திடற்புலம் விவசாய வீதி புனரமைப்பு | 0.73 | 2 மாதம் | C9 & C8 | 7,500.00 | 29.08.2019 |
| 9 | விளாத்தியடி வீதி புனரமைப்பு | 0.84 | 2 மாதம் | C9 & C8 | 8,500.00 | 29.08.2019 |
| 10 | கோட்டைக்காடு பு.வு.ஆ பாடசாலை வீதி புனரமைப்பு | 2.32 | 3 மாதம் | C8 & C7 | 23,500.00 | 12.09.2019 |
| 11 | Supply and Installing Desktop Computer | 0.6 | 1 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 6000.00 | 29.08.2019 |
| 12 | வீதி விளக்கு வழங்குதல்- 50W LED -226 Nos 100W LED -18 Nos, 36W CFL -367 Nos | 3.63 | 1 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 37000.00 | 12.09.2019 |

**க.தர்ஷன் தவிசாளர்**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

## 2009 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது நேற்று அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது அப்போது முஸ்லிம் அமைச்சர்களாவும், நாடாளுமன்ற உறுப்பினர்களாவும் இருந்த ஏழு பேர் அமிர்தலிங்கத்துக்கு எதிராக வாக்களித்திருந்தார்கள்.

ஆனால் அவர்கள் விட்ட அதே தவறுகளை நாங்களும் விட்டால் தொடர்ந்தும் இந்த நாட்டில் இஸ்லாமியத் தலைவர்களும், ஈழத் தமிழர்களும் ஒன்றாகப் பயணிக்க முடியாது. இணைந்த வடக்கு – கிழக்கு என்ற சொற் பிரயோகத்தை நாம் பேசமுடியாது போய் விடும்.

எனவே கள யாதார்த்தைப் புரிந்துகொண்டு எரிகின்ற வீட்டில் எண்ணெய் ஊற்றுவது போன்றோ, கொள்ளி பிடுங்குவது போன்றோ நடந்து கொள்ளாது ஒரு சமூகம் பாதிக்காத வகையில் மனிதாபிமானத்துடன் பார்க்கவேண்டியது நமது கடமை.

எனவே ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக நாம் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கட்சி நிர்வாகிகளோடு பேசியிருக்கிறோம். கட்சியின் மத்திய குழுவிலும், நாடாளுமன்றக்குழுவிலும் ஆராயவுள்ளோம். எனவே ஈழத்தமிழர்களின் நலன் சார்ந்து அந்த மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் இஸ்லாமிய மக்கள் பாதிக்கப்படாத வகையில் அவர்களின் இருப்பு கேள்விக்குட்படுத்தாத வகையில் ஒரு தீர்மானத்தை மேற்கொள்வோம்.

ரிஷாத் பதியுதீன் தவறு செய்திருந்தால் அதற்கு நீதி மன்றங்கள் இருக்கின்றன. அதனூடாகக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு விலக்க முடியும். ஆனால் நாடாளுமன்றத்தின் ஊடாக அரசியல் ரீதியான காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தவேண்டிய தேவை இல்லை. இரண்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த ஒரு இனத்தைச் சிதைத்து விடும் வகையில் அது அமைந்து விடக் கூடாது – என்றார். (ஐ)

## கார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த கார் ஓமந்தை ஏ-9 வீதியில் ரயர் காற்றுப் போனதால் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து மரத்துடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

வவுனியாவைச் சேர்ந்த வையாபுரிநாதன் திலகவதி (வயது–68) என்பவரே மரணமடைந்துள்ளார்.

காயமடைந்த மூவரில் ஒருவர் அனுராதபுரத்துக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார். (ஐ-100)

## டில்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் நேற்று நண்பகல் புதுடில்லி நகரைச் சென்றடைந்தார்.

புதுடில்லியிலுள்ள இந்திரா காந்திசர்வதேசவிமான நிலையத்தைச் சென்றடைந்த ஜனாதிபதியை இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ உள்ளிட்ட தூதரகப் பணிக்குழாமினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்திய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான ராஷ்டிரபதி பவனில் நேற்றிரவு நடைபெறவுள்ள பிரதமர் நரேந்திர மோடியின் பதவிப் பிரமாண வைபவத்தில் ஏனைய வெளிநாட்டுத் தலைவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பங்குபற்றினார். (ஐ)

## கொழும்புத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள வீட்டின் மலசலகூடக் குழி நிரம்பியதையடுத்து அந்த வீட்டுக்காரர்கள் குழியைத் துப்பரவு செய்தனர்.

இதன்போது மலசலகூடக் குழியைத் தோண்டியபோது அதில் மர்ம பொருட்கள் இருப்பதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து யாழ்ப்பாண பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அந்தக் குழிக்குள் இருந்து 7 கைக்குண்டுகளை மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட குண்டுகளை செயலிழக்க வைக்கும் நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

17ஆவது நாடாளுமன்றத்தை தேர்ந்தெடுக்க நடைபெற்ற தேர்தலில் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 353 இடங்களைக் கைப்பற்றி மகத்தான வெற்றி பெற்றது.

பாரதீய ஜனதா மட்டும் தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய அளவுக்கு 303 இடங்களைக் கைப்பற்றியது. என்றாலும் கடந்த 2014ம் ஆண்டு தனித்து ஆட்சியை பிடித்த போது கூட்டணி கட்சிகளையும் அமைச்சர்கள் சபையில் சேர்த்துக் கொண்டதைப்போல், இந்த முறையும் பாரதீய ஜனதா கூட்டணி அரசு அமைக்கிறது.

நாடாளுமன்ற பாரதீய ஜனதா கட்சியின் தலைவராக (பிரதமர்) தேர்ந்து எடுக்கப்பட்ட மோடிக்கு, புதிய பிரதமராக பதவி ஏற்குமாறு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் அழைப்பு விடுத்தார். அதைப் பிரதமர் மோடி ஏற்றார்.

வழக்கமாக புதிய அரசு பதவி ஏற்பு விழா ஜனாதிபதி மாளிகையில் உள்ள தர்பார் மண்டபத்தில் நடைபெறும். ஆனால் அந்த மண்டபத்தில் சுமார் 500 பேர் மட்டுமே அமர முடியும். ஆனால் இந்த முறை மோடி அரசு பதவி ஏற்பு விழாவில் வெளிநாட்டுத் தலைவர்கள் உட்பட சுமார் 8,000 பேர் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்பட்டது. இதனால் இடவசதியைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி மாளிகை முற்றத்தில் பதவி ஏற்பு விழாவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்திய வரலாற்றில் பிரதமர் பதவி ஏற்பு விழா ஜனாதிபதி மாளிகையின் முற்றத்தில் நடைபெற்றது இது 6ஆவது முறை ஆகும்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விழாவில் பிரதமர் மோடி பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். விழாவில் மோடிக்கு, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பிரதமராகப் பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். இதன்மூலம் அவர் தொடர்ந்து 2ஆவது முறையாக பிரதமர் ஆனார். அவரைத் தொடர்ந்து பிற அமைச்சர்கள் பதவியேற்றனர். (ஐ)

## தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக நேற்று முன் தினம் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கியிருந்த சிசிர மெண்டிஸ், தாக்குதல் அச்சுறுத்தல் குறித்து முன்னதாக எழுத்து மூலம் பொலிஸ்மா அதிபருக்குத் தெரியப்படுத்தியிருந்தார் எனக் கூறியிருந்தார்.

அதேவேளை, நேற்று அறிக்கையொன்றை வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தாக்குதல் குறித்து எந்த முன்னெச்சரிக்கையும் தனக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெளி வீதியுலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலம் வரும் நிகழ்வு இடைநிறுத்தப்பட்டது. அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து பாதுகாப்பு காரணத்துக்காக இந்த வெளி வீதிவலம் வருவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய கற்பூரத்திருவிழா நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது. நேற்றுக் காலை கந்தப் பெருமானுக்கு 1008 சங்குகள் வைத்து சங்காபிஷேக உற்சவத்தினைத் தொடர்ந்து ஆலய வசந்த மண்டபத்தில் திருக்கல்யாண வைபவம் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து அலங்காரக் கந்தன் திருமணக் கோலத்தில் எழுந்தருளி வெளி வீதிவலம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி வழங்கும் நிகழ்வு இடம்பெறும். இந்நிலையில், இந்த வெளி வீதி வலம்வரும் நிகழ்வு நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 21ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சிறிசேன.

நேற்று டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி, கடந்த மாதம் 19ஆம் திகதி நடந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்களின் கூட்டத்தில் கூடத் தாம் இதுபற்றி அறிவுறுத்தப்படவில்லையெனவும் கூறியுள்ளார். (ஐ)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக ஆர்வம் காட்டவில்லை. அனைத்தும் மிகச் சுலபமாகக் கிடைத்து விட்டமையே இதற்குப் பிரதான காரணம் ஆகும். அதே போன்று இத்தகைய சூழ்நிலைகள்பற்றிய போதிய தெளிவின்மையும் காரணமாக அமைந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய பாதுகாப்புச் சபை சுமார் இரண்டு மாதங்களாகக் கூடவில்லை என்பது நகைப்புக்குரியதாக இருக்கின்றது. நான் ஜனாதிபதி இருந்த காலத்தில் வாரத்துக்கு ஒருமுறை தேசிய பாதுகாப்புச் சபை கூடுவது வழக்கமாகக் காணப்பட்டது. அதனாலேயே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவும் முடிந்தது. அந்தக் கூட்டத்தில் யுத்தத்தின் அவ்வப்போதைய நிலை தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களை வழங்கினார்கள். யுத்தம் முடிவடைந்த பின்னரும் எனது ஆட்சிக்காலத்தில் பாதுகாப்புச் சபைக் கூட்டங்கள் முறையாக நடைபெற்றன. இவ்வாறு இரண்டு மாதங்கள் வரையில் பாதுகாப்புச் சபை கூடவில்லை என்பது பெரும் தவறாகும் – என்றார். (ஐ)

# தெரிவுக்குழு விசாரணையால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, மே 31

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் திறந்த விசாரணையால் தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும் அபாயமிருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈஸ்டர் திருநாளன்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு நேற்று முன் தினம் முதற் தடவையாகக் கூடியது. இதன்போது அரசியலை இலக்காகக் கொண்டு சிலர் கேள்விகளை எழுப்பியதையும் காணக் கூடியதாக இருந்தது.

எந்தவொரு விசாரணையாக இருந்தாலும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத விதத்திலும், தேசிய புலனாய்வுத் தகவல்களை அம்பலப்படுத்தாமலுமே முன்னெடுக்கப்பட வேண்டும். நேற்று முன் தினம் நடைபெற்ற விசாரணைகளில் அந்த கோட்பாடு பின்பற்றப்படவில்லை.

எனவே, இனிவரும் நாட்களில் நடைபெறவுள்ள விசாரணைகளின் மூலம் புலனாய்வுத் தகவல்கள் அம்பலமாகிவிடுமோ என்ற சந்தேகம் எழுகின்றது. ஆகவே, திறந்த விசாரணையை ஏற்கமுடியாது. இது விடயத்தில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அதேவேளை, சாட்சியமளிக்கும் பொறுப்புவாய்ந்த அரச அதிகாரிகளும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தாத விதத்திலேயே கருத்துகளை முன்வைக்கவேண்டும் – என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயங்குவதை நிறுத்தவேண்டுமென நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்காதிருக்கும் சூழலில் ஆளுநர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தின் மன்னார் மாவட்டத்துக்கான பல பாடசாலைகள் வட மேல் மாகாணத்துக்குட்பட்ட புத்தளம் மாவட்டத்தில் தற்போதும் இயங்கி வருகின்றன. இந்த விடயம் வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலத்திலேயே பல தடவைகள் பேசப்பட்டது.

குறிப்பாக மூன்று வருடங்களின் முன்னர் இந்த விடயம் சபையில் விவாதிக்கப்பட்டது. இது குறித்து சபையில் தீர்மானம் கூட எடுக்கப்பட்டது.

குறிப்பாக மன்னார்ப் பாடசாலைகள் புத்தளத்தில் இயங்கி வருகின்ற போதும் அங்கு கடமையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாண சபையின் ஊடாக ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனைச் சபையில் சுட்டிக்காட்டி அவ்வாறு பிற மாகாணத்தில் இயங்கும் பாடசாலைகளுக்கும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் எமது சபையின் ஊடாகச் சம்பளம் வழங்கமுடியாது. அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனத் தீர்மானம் கூட நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பாடசாலைகள் வடக்கு மாகாண சபையின் கீழ் கொண்டு வரப்படவேண்டும் அல்லது வட மேல் மாகாணத்துடன் இணைக்க வேண்டும் எனக் கோரப்பட்டது. ஆனாலும் மேலதிக நடவடிக்கைகள் இன்று வரை எடுக்கப்படவில்லையாயின் அதற்கு முழுப் பொறுப்பும் உயர் அதிகாரிகளே காரணமாகும்.

மாகாண சபையின் தீர்மானத்தை அவர்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை. மாகாண சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் தொடர் நடவடிக்கையை அதிகாரிகள் செய்திருந்தால் இந்த மூன்று ஆண்டில் இந்தப் பிரச்சினைக் குத் தீர்வு கிடைத்திருக்கும்.

எனவே வடக்கு மாகாணத்துக்கு தற்போது வந்துள்ள ஆளுநர் சுரேன் ராகவன் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டும். இந்த விடயத்தில் மட்டுமல்லாது மாகாண சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஊழல் மோசடி தொடர்பான விசாரணைகளின் தொடர் நடவடிக்கை போன்றவற்றிலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ஐ-07)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளவுள்ளார்.

அவர் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகிறார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவரது பயணம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 29 முதல் ஜுன் 7ஆம் திகதிவரை அவர் இலங்கை, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது அவர் அரசியர்மட்ட அதிகாரிகளைச் சந்திப்பார்.

அத்தோடு பாதுகாப்பு, சமாதானம், நிலக்கண்ணிவெடிகள் அகற்றல் மற்றும் காணாமற் போனோர், ஆட்கடத்தல், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பாகவும் இந்த விஜயத்தின்போது அவர் கலந்துரையாடவுள்ளார் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பிரதமரையும், ஜனாதிபதியையும் சிறையிலடைப்பார் பொன்சேகா

## மத்திய மாகாண ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, மே 31

சரத் பொன்சேகாவுக்கு பாதுகாப்பு அமைச்சைக் கொடுத்தால் முதலில் அவர் பிரதமரையும், ஜனாதிபதியையும் பிடித்துச் சிறையிலடைப்பார் என மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன தெரிவித்தார்.



நுவரெலியா நானு ஓயா பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சரத் பொன்சேகா பற்றி எமக்கு நன்றாகத் தெரியும். அவரைப்பற்றி தெரியாமல் சிலர் கையெழுத்து எடுத்து ஜனாதிபதியிடம் கொடுத்தார்கள். இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் இந்த நாட்டில் சமாதானத்தை ஜனாதிபதி ஏற்படுத்தியிருப்பதோடு இன்று வரை எந்தப் பிரச்சினையும் இல்லை. இப்போது அசாத் சாலி, ரிஷாத் பதியுதீன், ஹிஸ்புல்லா ஆகியோரைத் தாக்குகின்றனர்.

இவர்களுக்கு இந்தச் சம்பவங்களுடன் தொடர்பிருந்தால் ஆதாரங்களுடன் முறையிடுங்கள். அவ்வாறு முறைப்பாடு செய்தால் பொலிஸார், இராணுவத்தினர் விசாரணை நடத்தித் தீர்மானிப்பார்கள். வெறுமனே பேசுவதன் ஊடாகவும், ஊடகங்களில் குரல் பதிவுகளை வழங்குவதாலும் ஒரு நபர் குற்றவாளியாகிவிடமாட்டார்.

இப்போது ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிந்தேன். இந்தப் பிரேரணையில் 12 விடயங்கள் உள்ளன. அதனை நிரூபிக்கவும் முடியாது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி கொள்ள வைக்கமுடியாது என்று நான் கூறுகிறேன்.

சிலர் ஜனாதிபதித் தேர்தலையும், அரச மாற்றத்தையும் கேட்கின்றனர். நாட்டில் நெருக்கடி நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றால் என்ன நடக்கும்? ஒட்டுமொத்த பொறிமுறையும் 4,5 மாதங்களுக்கு ஸ்தம்பிதமடைந்துவிடும் – என்றார். (ஐ)

# 1,800 தொலைபேசி அழைப்புக்கள்; புலனாய்வு பிரிவினர் விசாரணை

கொழும்பு, மே 31

பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் அதிகம் பயன்படுத்திய 1800 தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரிகள் வேறு நபர்களுடன் நடத்திய தொலைபேசி உரையாடல்களின் படி பல இலக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறியுள்ளார்.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைதான 87 பேர் சி.ஐ.டி, ரி.ஐ.டியின் பிடியில் தொடர்ந்தும் உள்ளனர். (ஐ)

# கணவனின் தாக்குதலில் மனைவி உயிரிழப்பு !

இரத்தினபுரி, மே 31

பெல்மதுளையில் கணவன் கோடரியால் நடத்திய தாக்குதலில் மனைவி உயிரிழந்தார்.

குடும்பப் பிரச்சினையின் காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய கணவரைப் பொலிஸார் கைது செய்துள்ளார். (ஐ)

# சாவகச்சேரிச் சந்தை நட்டத்தில் இயங்க தவிசாளரும் சில ஊழியருமே காரணம்

## நகரசபை உறுப்பினர்கள் 6 பேர் கூட்டாகக் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 31

சாவகச்சேரிப் பொதுச்சந்தை நட்டத்தில் இயங்குவதற்கு நகரசபை தவிசாளரும், சில ஊழியர்களுமே காரணம் என நகரசபை உறுப்பினர்கள் 6 பேர் கூட்டாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமது முறைகேடான நடத்தைகளை மறைப்பதற்காக நகரசபை தீர்மானத்தை மீறி தவிசாளர் நடந்து கொள்வதுடன் சந்தை வர்த்தர்களை தமக்கு எதிராகத் திருப்பிவிட்டுள்ளார் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகையின் கீழ் உள்ள பொதுச்சந்தையை குத்தகைக்கு வழங்குவதை எதிர்த்து சாவகச்சேரி சந்தை வர்த்தகர்கள் நேற்று முன் தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். இது குறித்து சாவகச்சேரி நகர சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 6 பேர் நேற்று யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து பேசியிருந்தனர்.

இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்–

சாவகச்சேரி நகர சபையின் ஆழுகையின் கீழ் உள்ள சந்தையிலிருந்து நகர சபைக்குக் கிடைக்கும் வருமானம் போதுமானதாக இல்லை. இதற்குக் காரணம் சந்தையில் வர்த்தகர்களிடம் முறையாக வரி அறவிடப்படுவதில்லை.

வரி அறவீட்டு உத்தியோகத்தர்களும் நகரசபையில் உள்ள உயர் அதிகாரிகள் சிலரும் நகரசபைக்குக் கிடைக்கும் வருமானத்தை தொடர்ச்சியாகக் களவாடி வருகின்றனர். குறிப்பாக மீன் சந்தையில் நீண்டகாலமா வரி அறவீட்டு உத்தியோகத்தராகப் பணியாற்றிய ஒருவரை மாற்றி அந்த இடத்தில் வேறு ஒரு வரி அறவீட்டு உத்தியோகத்தரை நியமித்தபோது நகரசபைக்கு முழுமையான வரிப்பணம் கிடைத்திருக்கின்றது.

ஆகவே அங்கு நீண்டகாலமாக வரி அறவிட்டு வந்த ஊழியர் வியாபாரிகளிடமிருந்து பெற்ற வரிப்பணத்தில் பெரும் பகுதியை களவாடியிருக்கின்றார். எமது கணிப்பீட்டின்படி அவர் ஆகக் குறைந்தது ஒரு நாளுக்கு 5 ஆயிரம் ரூபாவைக் களவாடியிருக்கவேண்டும். இவ்வாறு பல்வேறு பிரச்சினைகள் சாவகச்சேரிச் சந்தையில் காணப்பட்ட நிலையில், நகரசபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமல் – மக்களுக்குச் செய்யவேண்டிய சேவைகளைச் செய்ய முடியாதுள்ளது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக நாம் சபையின் கவனத்துக்கு கொண்டு வந்து கடந்த ஏப்ரல் மாதம் நீண்ட விவாதத்தின் பின்னர் நகரசபைக்குச் சொந்தமான பொதுச்சந்தையை குத்தகைக்கு வழங்குவதென ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்த தீர்மானத்தை தவிசாளா இது வரை நடைமுறைப்படுத்தாமல் சபையின் தீர்மானத்தை உதாசீனம் செய்தார். சந்தையைக் குத்தகைக்கு வழங்குவதில் தனக்கு உடன்பாடில்லை எனக் கூறிக் கொண்டு சந்தையில் உள்ள பெரிய வியாபாரிகள் சிலரைத் தூண்டிவிட அவர்கள் மற்றைய வியாபாரிகளை தூண்டி அனைவரும் இணைந்து எமக்கு எதிராக நிற்கின்றனர்.

ஆனால் சந்தையை குத்தகைக்கு வழங்கவேண்டிய அவசியம் இல்லை எனவும், சந்தை வர்த்தகர்களிடம் முறையாக வரியை பெற்று சபைக்கு கொண்டு வந்து சேர்த்தால் சரி எனக் கூறி 3 மாதங்கள் கால அவகாசம் கொடுத்திருந்தும் ஒரு நடவடிக்கை கூட எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் தற்போது பொதுச் சந்தையை நகரசபை நடத்தவில்லை, சில வர்த்தகர்களே நடத்துகிறார்கள் என்ற அளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது. இதற்கு காரணம் வரி அறவீட்டாளர்கள் தொடக்கம் நகரசபையில் உள்ள சில உயர் அதிகாரிகள், தவிசாளர் வரை மக்களிடமிருந்து பெறப்படும் வரிப்பணத்தைச் சூறையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே மக்கள் இதனை நன்றாக புரிந்து கொள்ளவேண்டும் – என்றனர். (ஐ)

# முஸ்லிம் சமூகத்தவர் மீது வெறுப்படைய செய்வதை ஊடகங்கள் தவிர்க்கவேண்டும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை



கொழும்பு, மே 31

இன்றைய பதற்றமான சூழ்நிலையில் சந்தேகங்களும், நிச்சயமற்ற தன்மையும் மக்களது உள்ளங்களில் குடிகொண்டுள்ள வேளையில், சமூகங்களுக்கிடையில் அமைதியும் ஒற்றுமையும் நிலவச் செய்வதற்கு உரிய பங்களிப்பைச் செய்வது ஊடகங்களின் கடமையும், பொறுப்பும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நம்புவதாகத் தெரிவித்துள்ள கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம், பெரும்பான்மை சமூகத்தினர் முஸ்லிம்கள் மீது வெறுப்படையக் கூடியவாறு சாதாரண சம்பவங்களை கூட ஊதிப் பெருப்பித்து பூதாகரமாக்குவதை ஊடகங்களில் பணிபுரிவோர் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென விநயமாக வேண்டிக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு: –

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தீவிரவாத முஸ்லிம்கள் சிலர் மேற்கொண்ட கீழ்த்தரமானதும் மிலேச்சத்தனமானதுமான படுகொலைகளின் விளைவாகப் பெரும்பாலான முஸ்லிம்கள் அச்சத்திலும், அதிர்ச்சியிலும் ஆழ்ந்து அவதிப்படுகின்றனர்.

இந்த இக்கட்டான வேளையில் மேற்கொள்ளும் நோவினை மிக்க பயத்தினூடாக இலங்கை முஸ்லிம்கள் தாம் இத்தகைய ஆபத்தில் சிக்கிக் கொள்வதற்கு வழிகோலிய ஏதுக்கள் பற்றி சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. பிரதான ஊடகங்களினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் மிகவும் பாரதூரமான செயற்பாடுகளை தளர்த்தினாலன்றி சகிப்புத்தன்மையோடும், பச்சாதாபத்தோடும் சுயவிமர்சனத்திற்கான வழிவகைகளை கண்டறிவது எமது சமூகத்தைப் பொறுத்தவரை மிகவும் சிக்கலான காரியமாக ஆகிவிடும்.

அரசியல் ரீதியாக நெறிப்படுத்தப்படும் ஊடக நிறுவனங்கள் ஒரு சமூகத்தவரை மற்றொரு சமூகத்தவர் மீது ஆத்திரமூட்டச் செய்வதன் மூலம் மோதலை வளர்ப்பதல்லாது, அரசாங்கத்தையும் ஆளும் தரப்பிலுள்ள அரசியல் கட்சிகளையும் அவமானத்திற்கு உள்ளாக்குவதாகும். சில பிரதான ஊடகங்கள் இஸ்லாமோபோபியா எனப்படும் இஸ்லாத்தின் மீதான பீதி மனப்பான்மையை நயவஞ்சகத்தன்மையோடு கையாண்டு, சட்டம் தனது கடமையை நிறைவேற்றுவதற்கு முன்னரே தாமாக தீர்ப்பை வழங்கிவிடுகின்றன.

அரசியல் உள்நோக்கங்கள் கொண்ட சக்திகள் அரசின் மீது அடர்ந்தேற மக்களைத் தூண்டுகின்ற வேளையில், அரசு அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஊடகங்கள் தமது சொல்லாட்சியை உரிய முறையில் கையாள்வதற்கான பெரும் பொறுப்பைச் சுமந்திருக்கின்றன – என்றுள்ளது. (ஐ)

**தீபம் திருமண சேவை**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சாதகங்கள் இங்கே பொருத்திக் கொடுக்கப்படும். மிக துரிதமான நம்பிக்கையான திருமண சேவை.

தொடர்புகளுக்கு: 021 792 2172
078 3971934
0776606398

முகவரி இல: 4/3 உடுவில் தெற்கு.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 31.05.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.